Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# இரக்கம்

இரக்கம் என்றால் என்ன? • இஸ்ரயேலுக்கு தேவன் பாராட்டிய இரக்கம்


சபைக்காக தேவன் பாராட்டுகிற இரக்கம்

மனுக்குலத்தின் மேல் தேவன் கொண்டுள்ள இரக்கம் • இயேசு கிருபையின் ஒரு மாதிரி

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் • இரக்கமும் கருணையும்

**இரக்கம்**

# ஆதியிலே



*கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளது... - 11நாளாகமம் 20:21*

தேவனுடைய மகிமையான குணங்கள் அநேகமாய் இருப்பினும், மனித குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள மிகுந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவருடைய இரக்கமே முக்கிய அம்சமாக இருக்கிறது. மரண தண்டனையிலிருந்து மனுக்குலத்தை மீட்க, தன்னுடைய ஒரே பேரான குமாரனை பலியாக கொடுப்பதற்கு, தேவன் இந்த மனுக்குலத்தின் மேல் வைத்த அன்பும், பரிவும், இரக்கமும் அவரை வழிநடத்தியது. நித்தியமான ஜீவன் அல்லது மரணத்தை பெறுவதற்கு இவர்கள் பாத்திரமாக இருக்கிறார்கள் என்பதை, அறிந்துகொள்வதற்கு முன் - பாவத்தின் அனுபவங்களை மனுக்குலம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைக்க அவருடைய கிருபை உதவியது.

தேவனுடைய சிநேகிதரான ஆபிரகாமின் வழிவந்த இஸ்ரயேல் ஜனங்கள், தங்களுடைய இருதயத்தில் கடினப்பட்டு, வணங்காக் கழுத்துள்ளவர்களாக இருந்த நிலையில், தேவனுடைய கிருபை அதிகமாக செயல்பட்டது. தம்முடைய குமாரனாகிய இயேசுவை மேசியா அல்ல என்று அவரை நிராகரித்ததினால் தேவன் அவர்களை தண்டித்தாலும், அவருடைய கிருபை தொடர்ந்து அவர்களை நடத்தியது. இயேசுவைப் பின்பற்றி, அவரை ஏற்றுக்கொண்டு, அவர்கள் செய்த பலியின் உடன்படிக்கைக்கு முடிவு பரியந்தம் விசுவாசமாக இருப்போரிடம் தேவனுடைய கிருபை மிக அதிகமாக செயல்படுகிறது.

இறுதியாக கிறிஸ்துவின் இராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு அந்த இராஜ்யத்தின் ஆட்சியினால் பாவம் மற்றும் மரணத்தின் பாதிப்புகள் முற்றிலுமாக அகற்றப்படும்போது தேவனுடைய கிருபையை முழுமையாக உணரலாம். கல்லறைகளிலிருந்து திரும்பி வரும் மனித குடும்பம் தேவனுடைய மிகுந்த இரக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட, இராஜ்யத்தின் அற்புதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்போது "அக்காலத்திலே- இதோ, இவரே நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார். இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம், இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் ..." (ஏசா 25:9) என்று முழு மனுக்குலமும் பெரும் மகிழ்ச்சியோடு ஆரவாரிப்பார்கள்.

***இரக்கம் என்றால் என்ன ?*** என்ற கட்டுரையோடு இந்த பிரதியை துவங்குகிறோம். தேவன் இஸ்ரயேலின்மேல் காட்டிய இரக்கத்தையும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் சந்ததியின்மேல் இனி அவர் காட்டப்போகிற இரக்கத்தைப் பற்றியும் ***இஸ்ரயேலுக்கு தேவன் பாராட்டிய இரக்கம்*** என்ற கட்டுரை தெளிவாக விவரிக்கிறது. இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றும் சீஷர்களுக்கு தேவனுடைய கிருபை எவ்வளவு நன்மைகளை வருவிக்கிறது என்று ***சபைக்காக தேவன் பாராட்டுகிற இரக்கம்*** என்ற கட்டுரை விளக்கம் அளிக்கிறது. கடந்த காலத்திலும் வருங்காலத்திலும் மனுக்குலத்திற்காக தேவன் கொண்டுள்ள கிருபையை ***மனுக்குலத்தின் மேல் தேவன் கொண்டுள்ள இரக்கம்*** என்ற கட்டுரை வெளிப்படுத்துகிறது. இரக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இயேசு தம்முடைய முதலாம் வருகையில் செயலாற்றிய காரியங்களை ***இயேசு, கிருபையின் ஒரு மாதிரி*** என்ற கட்டுரை காட்டுகிறது. சபையின் அங்கத்தினர் தங்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் எவ்வாறு இரக்கத்தை காட்டவேண்டும் என்று ***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்*** என்ற கட்டுரை விளக்குகிறது. ***இரக்கமும் கருணையும்*** என்ற கட்டுரையில் 103ம் சங்கீதத்தின் வசன வாரியான ஆராய்ச்சியில், தேவனுடைய இரக்கத்தின் குணாதிசயங்கள் சிலவற்றை விவரிப்பதோடு இந்த பிரதி முடிவுபெறுகிறது.

**ஜனவரி-பிப்ரவரி**


**ஆதியிலே (இரக்கம்) . . . . . .** 1

**இரக்கம் என்றால் என்ன. . . . .** 2

விழுந்துபோன மனிதர்களாகிய யோசேப்பு, மோசே, தாவீது மற்றும் பேதுருவினிடம் தேவன் பாராட்டிய இரக்கம் நமக்கு மாதிரிகளாக வைக்கப்பட்டுள்ளது.

**இஸ்ரயேலுக்கு தேவன் பாராட்டிய இரக்கம் . . . . . . .** 6

ஆபிரகாமின் சந்ததியோடு தேவன் கொண்டுள்ள விசேஷித்த ஐக்கியமானது, அவர்களை தேவனுடைய கிருபையின் பாத்திரமாக்கியது.

**சபைக்காக தேவன் பாராட்டுகிற இரக்கம் . . . . . . . .** 9

இயேசுவின் சீஷர்களை நேசகுமாரனுக்கேற்ற மணவாட்டியாக தேவனுடைய இரக்கம் இன்று உருமாற்றிக் கொண்டிருக்கிறது.

**மனுக்குலத்தின் மேல் தேவன் கொண்டுள்ள இரக்கம்** 12

முழு மனித குடும்பமும் சீர்பொருந்துவதற்கு தேவன் அவருடைய இரக்கத்தை வாக்களித்தார்.

**இயேசு கிருபையின் ஒரு மாதிரி . . . . . . .** 16

இயேசு தம்முடைய முதல் வருகையில், குறிப்பாக தாம் செய்த அற்புதங்களினால், தன்னிலுள்ள இரக்கத்தை செயலாற்றினார்.

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். .** 19

நம்முடைய பரலோக தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோல நாமும் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

**இரக்கமும் கருணையும். . . . . . . . .** 23

103ம் சங்கீதத்தின் வசன வாரியான ஆய்வு, தேவனுடைய முழு இரக்கமும் மனுக்குலத்திற்கு பயனுள்ளதாக இருப்பதைக் காட்டுகிறது.



இரக்கமுள்ள அன்பு

# இரக்கம் என்றால் என்ன?

*மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.- மீகா 6:8*

Ted Marten

ஒரு குற்றவாளியிடம் அல்லது ஒருவருடைய அதிகாரத்தின் கீழ் இருப்போருக்கு காட்டப்படும் கருணை, பரிவு மற்றும் பொறுமையே இரக்கமாகும். எளியோருக்கு தர்மம் செய்தல், இரக்கமுள்ள மனம், முகதாட்சணியம், கருணை போன்ற வார்த்தைகள் பொதுவாக இரக்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ஆயினும், நீதியைச் சரிகட்டும்போது குற்றவாளிகளிடம் காட்டப்படும் கருணையே இரக்கமாகும்.

வேதாகமத்தில் இரக்கம் என்ற வார்த்தைக்கு உண்டான எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகள் இரண்டும் - இரக்கத்திற்கு அகராதியில் கொடுக்கப்பட்ட அதே பொதுவான அர்த்தத்தைக் கொடுக்கிறது. மற்றவர்கள் மேல் பரிவு, கனிவான எண்ணங்கள், துன்பப்படுவோரை விடுவிக்கும் மனவிருப்பம் போன்ற குணங்கள், இரக்கத்தை பின்னனியாக கொண்டிருக்கிறது. மற்றவர்களின் துன்ப நிலையை மனப்பூர்வமாகக் கேட்டு, கூடுமானால் அவர்களின் பிரச்சனையிலிருந்து அவர்களை விடுவிப்பதே - இரக்கமாக இருக்க விரும்புவோருக்கு தேவைப்பட்ட அடிப்படை குணமாகும். இப்படிப்பட்டவர்களுக்கே நம்முடைய ஆண்டவர் அவருடைய இரக்கத்தை வாக்களித்திருக்கிறார்.
(மத்தேயு 5:7)

லூக்கா 6ம் அதிகாரத்தில் இயேசுவின் மலைபிரசங்கத்தை காணலாம். ஒருவர் சிநேகிதரோடும், பகைவரோடும் நடந்துகொள்ளவேண்டியதில் உள்ள வித்தியாசத்தை பற்றி நம்முடைய ஆண்டவர் 32ம் வசனத்தில் துவங்குகிறார். நமக்கு நன்மை செய்வோருக்கும் நாம் நன்மை செய்தாலும், நமக்கு திருப்பி கொடுப்பவர்களுக்கு கடன் கொடுத்தாலும், நம்மை நேசிப்போரை நேசித்தாலும் என்ன கீர்த்தி உண்டு ? உலகத்தாரும் அப்படியே செய்கிறார்களே என்று கூறுகிறார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறுகருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே."
(லூக்கா 6:35,36)

தீமை செய்பவர்களிடமும், நன்றியறியாதவர்களிடமும் அன்பாக இருப்பதே இரக்கமாகும் என்று இயேசு விளக்கமளிக்கிறார். ஏனெனில் தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரராக இல்லாத தீயோர் மேலும், பக்தியற்றவர்கள் மேலும் தேவன் இரக்கமாக இருக்கிறார். சகல சிருஷ்டிகளும் குறித்த காலத்தில் தேவனுடைய இரக்கத்தை பெறுவதற்கு முன்னதாகவே அவருடைய நெறி வழுவாத நீதிக்கும் மேலாக, சர்வசிருஷ்டிகளுக்கும் இப்போது தேவன் இரக்கம் பாராட்டுகிறார். நாமும் இப்படியாக இரக்கம் காட்டவேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறோம்.

## விழுந்துபோன மனுஷன் மேல் தேவன் காட்டும் இரக்கம்

தேவனுடைய இரக்கம் - முதல் முதலில் ஏதேன் தோட்டத்தில் செயலாற்றப்பட்டது என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆதாம் பாவம் செய்தபோது, அவர்கள் இருவரும் உடனடியாக மரணத்திற்கு உரியவர்களானார்கள் அதாவது உடனடியாக மரிக்கக்கூடிய நிலையிலிருந்தார்கள். ஆனால் தேவன் அவர்களை உயிரோடிருப்பதற்கு அனுமதித்து, பலுகி பெருக கட்டளையிட்டார். அதனால் அவர்களும் அவர்களின் சந்ததியும் நன்மையையும், தேவனுடைய கண்டிப்பையும், பாவத்தினால் ஏற்படும் விளைவுகளையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

பிதாவாகிய தேவன் தன்னுடைய சொந்த மாதிரியின் மூலமாக, மனித சிருஷ்டிகளுக்கு இரக்கத்தின் கோட்பாட்டை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். மேலும் மனித மாதிரிகளையும் அவருடைய சொந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். கொடுக்கப்பட்ட காலத்தில் அவர்கள் தீமையை சிந்தித்து செயலாற்றுவதற்கு நேரங்களை செலவிடாதபடிக்கு அவர்கள் கடுமையாக வேலை செய்து தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களை வழிநடத்தினார். பாவத்தின் விளைவுகளுக்கும், சீரழிந்துப் போகும் காரியங்களுக்கும் மனுக்குலம் இன்னும் தப்பிக்கவில்லை. ஆனாலும் அதன் மத்தியில் இரக்கத்தின் செயல்களையும், அதன் விளைவுகளையும் காண்பதற்கு வாய்ப்பு கிடைத்தது.

இரக்கத்தின் அநேக மாதிரிகள் தேவனுடைய வார்த்தைகளில் கொடுக்கப்பட்டிருந்தாலும், "இரக்கம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால்

அந்த சம்பவங்களில் நடப்பிக்கப்படும் காரியங்களில் வெளிப்படும், குணங்களைக் காணலாம். இரக்கம் ஒரு சிறப்பான தன்மையோ, மனநிலையோ அல்ல. பரிவு, கனிவு மற்றும் அன்பினால் ஊக்குவிக்கப்பட்டு வெளிப்படுத்தக்கூடிய செயலே - இரக்கம்.

## யோசேப்பு

வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் இரக்கத்திற்கோர் எடுத்துகாட்டாகிய யோசேப்பு நம்முடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டார். அவர் தம்முடைய சகோதரர்களால் விற்கப்பட்டபின் பாரோனுக்கு அடுத்த நிர்வாகியானார். பஞ்சத்தில் அகப்பட்ட யோசேப்பின் சகோதரர்கள், தானியம் வாங்க எகிப்திற்கு வந்தார்கள். கடந்த நாட்களில் தன்னுடைய சகோதரர்கள் தனக்கு செய்த கொடுமைகளுக்கு ஏற்றபடி நியாயம் விசாரிப்பதற்கான சரியான அதிகாரத்தை பெற்றிருந்தார். ஆனால் யோசேப்பு தீமைக்கு பதிலாக நன்மை செய்தார். அவர்களைக் கண்ட யோசேப்பு மனதுருகினார். விசேஷமாக தன்னுடைய தகப்பனுக்காகவும், தன்னுடைய சகோதரன் பென்யமீனுக்காகவும் அவர் கருணை காட்டினார். அந்த பஞ்ச காலத்தில் அவர்கள் உயிர் வாழ தானியத்தையும் கொடுத்ததோடு மட்டும் அல்ல, அவர்கள் அனைவரையும் எகிப்திற்கு வரவழைத்து தன்னுடைய இரக்கத்தை செயலாற்றினார்.

அவரின் சகோதரர்கள் யோசேப்பின் உண்மையான அல்லது தூய்மையான இரக்கத்தை நம்புவதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள். இவ்வளவு கொடூரமாக ஒருவரை நடத்தினபின்னும்,அதற்கு பதிலாக இப்படிப்பட்ட இரக்கத்தை அவரால் எப்படி காட்டமுடியும் என்று அவர்கள் பிரமித்தார்கள். அவர்களுக்கு இரக்கத்தை மட்டும் அல்ல, அவர்கள் தங்குவதற்கு எகிப்தில் வளமான இடத்தையும் கொடுத்தார். அவர்களின் குற்ற உணர்வும், யோசேப்பை புரிந்து கொள்ளாத அவர்களின் மனநிலையும், அவர்களுக்குள் ஆழமாக பதிந்திருந்தது. ஏனெனில், பதினேழு வருடங்களுக்குப் பின் யாக்கோபு மரித்தபோது, யோசேப்பு அவர்களை பழிவாங்கிவிடுவாரோ என்று அஞ்சினார்கள். அவர்களின் சகோதரனின் குணத்தைப் பற்றி அவர்கள் அறியாதிருந்தார்கள். அதற்கு பதிலாக அவர்கள் யோசேப்பை நடத்தினது போல, யோசேப்பு தங்களை நடத்துவாரோ என்று பயந்தார்கள்.

## மோசே

மோசே தேவனுடைய கரத்திலிருந்து இரக்கத்தைப் பெற்று அதே இரக்கத்தை தம்முடைய சகோதரர்களிடம் பிரதிபலித்தார். யூதர்களுக்குப் பிறக்கும் ஆண்பிள்ளைகள் கொல்லப்படவேண்டும், என்று சட்டம் போட்ட பாரோனிடமிருந்து மோசேயை, பிதாவாகிய தேவன் மிக அருமையாகக் காப்பாற்றினார். மோசே ஒரு எகிப்தியனைக் கொலை செய்த குற்றத்திலிருந்தும் விடுவித்தார். தன்னுடைய சகோதரர்களுக்கு மத்தியஸ்தராக பணிபுரிவதற்கு, 40 வருடங்கள் பொறுமையாக மோசேயை ஆயத்தப்படுத்தினார். தேவனுடைய இரக்கங்கள் மற்றும் அவருடைய கிருபைகள் அனைத்தையும் மோசே தியானித்திருக்கவேண்டும். எனவே, தேவன் முட்செடியிலிருந்து மோசேயை அழைத்தபோது, பயபக்தியோடும், மரியாதையோடும் தேவனைப் பணிந்துகொண்டார். அவர் மிகவும் மனத்தாழ்மையுள்ளவராக இருந்தபடியால், இஸ்ரயேலரை விடுவிப்பதற்கான அழைப்பை முதலில் மறுத்துவிட்டார்.

இஸ்ரயேலின் மீட்பரும், அவர்களின் மத்தியஸ்தருமான மோசே, தேவனுடைய இரக்கத்தின் கருவியாக செயல்பட்டார். மோசேயின் வழியாக தேவன் இஸ்ரயேலர்களுக்கு மன்னாவையும், தாகத்திற்கு தண்ணீரையும் கொடுத்தார். அவர்களின் பிரச்சனைகளை மோசே தீர்த்தார். தேவன் அவரைக் கொண்டு இஸ்ரயேலுக்கு ஒரு ஆசாரியத்துவத்தை ஸ்தாபித்தார்.

மோசே நீண்ட காலம் வராதிருந்தபோது, இஸ்ரயேலர்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியை வார்ப்பித்தார்கள். தேவனுடைய கோபம் மூண்டது. அவர்களை அழித்துவிட்டு, மோசேயை ஒரு பெரிய ஜாதியாக்கும்படி தேவன் நினைத்தார். ஆனால் எகிப்து மற்றும் புறஜாதியாரின் மத்தியில் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமல், மகிமைப்படும்படியாகவும், மோசே தம்முடைய ஜனத்தின் மேல் வைத்திருந்த பாசத்தையும் மனதில் வைத்தவராக இஸ்ரயேல் ஜனங்களுக்காக தேவனிடம் மன்றாடினார். மேலும் இஸ்ரயேலின் எதிரிகளின் மத்தியிலும் தேவனுடைய குணங்கள் குறைவாக எண்ணப்படாதபடிக்கு, அந்த ஜனங்களின் மேல் இரக்கம் காட்டும்படி தேவனிடம் வேண்டினார். ஒப்பந்தத்திற்கு ஒத்துக்கொண்ட இரு வகுப்பாரில், ஒரு சாரார் தங்களுடைய பொறுப்புகளை செய்வதற்கு தவறினால், அவர்கள் சார்பாக மற்ற தரப்பினரிடம் பேசி சமாதானம் செய்யக்கூடிய ஒரு மத்தியஸ்தரின் பொறுப்பை மோசே நன்கு உணர்ந்திருந்தார்.

இஸ்ரயேல் ஜனங்களுக்கு தேவனுடைய கண்களில் இரக்கம் பெறுவதற்கு, மோசே கெஞ்சுவதோடு விட்டுவிடாமல், அவர்கள் செய்த பாவத்திற்கு பதிலாக தன்னுடைய ஜீவனை பணையம் வைத்து அவர்களை விடுவிக்கும்படி வேண்டினார். மோசே அவருடைய சகோதரர்களை அதிகமாக நேசித்தார். அவர்களுக்காக தன்னுடைய ஜீவனை கொடுக்கமுன் வந்தபோது அவர்கள் மேல் அவர் காட்டின இரக்கம் வெளிப்பட்டது.

## தாவீது

தேவனுடைய கிருபையைப் பெற்ற மற்றொருவர் - இராஜாவாகிய தாவீது. தாவீது இஸ்ரயேலின் மேல் இராஜாவாக தேர்வு செய்யப்பட்ட போதும் தேவனுடைய இரக்கம் செயலாற்றப்பட்டது. ஆனால் தாவீது உரியாவின் மனைவியோடு செய்த பாவத்திற்குப்பின் தேவன் அவர்மேல் காட்டிய இரக்கம் குறிப்பிடக்கூடிய ஒரு எடுத்துக்காட்டானது.

பத்சேபாளோடு தவறான உறவு கொண்டதினாலும், உரியாவின் மரணத்தை ஏற்பாடு செய்ததினாலும் - பத்சேபாளிடம் தாவீதுக்குப் பிறந்த முதல் குழந்தை மரிக்க வேண்டும் என்பது தேவனுடைய தீர்ப்பாக இருந்தாலும், தேவன் தாவீதின் மேல் இரக்கம் பாராட்டினார். வேதனையான ஏழு நாட்களும் தாவீது தான் செய்தவைகளை எண்ணி, தேவனுடைய சமூகத்தில் மன வருத்தத்தோடு தரையில் கிடந்தார். அவருடைய குமாரன் மரித்தபின் அந்த மரணத்திற்கு அவரே காரணமானார் என்ற சிந்தையோடு, அவர் ஜீவிக்கவேண்டியதாக இருந்தது. இதை காட்டிலும் தேவன் அவர் செய்த பாவத்திற்கு அவருடைய ஜீவனை எடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். ஆயினும், தேவனுடைய இரக்கங்களை தாவீது பெற்றார். அவருடைய பாவத்திற்கான தண்டனையை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அனுபவித்தார். அந்த பாவத்திற்காக தாவீதையோ, பத்சேபாளையோ, தேவன் கொல்லவில்லை, அவருடைய இராஜ்யத்தையும் அவர் நீக்கவில்லை. ஆகையால், தேவன் இரக்கமுள்ளவர் என்று காலப்போக்கில் அவர் அறிந்துக்கொண்டார். தேவனுடைய இரக்கங்களை நன்கு உணர்ந்த தாவீது, அவர் எழுதின சங்கீதத்தில் அவைகளை பிரதிபலித்தார். அந்த சங்கீதங்களில் தேவனுடைய இரக்கத்தை மிக உயர்வாகப் பாராட்டினார் -"கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். " (சங்கீதம் 145:8)

"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார், கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது, உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.. "(சங்கீதம் 138 :8)

"என்றுமுள்ளது" என்ற வார்த்தையை தாவீது பயன்படுத்தும்போது "முடிவில்லாதது" என்று பொருள்பட்டிருக்க வேண்டும். அல்லது முடிவில்லாத நீண்ட எதிர்காலத்தைக் குறிப்பிட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் முழு மனுக்குலத்திற்கு தேவனுடைய இரக்கம் பாராட்டப்படுவதை இது குறிப்பிடவேண்டும்.

## மனுக்குலத்திற்கு தேவனுடைய இரக்கம்

தேவனுடைய பரிபூரண சட்டங்களைப் பூரணமாகக் கடைபிடிக்கும் அளவுக்கு, மனுக்குலம் பூரண நிலையை பெறும் வரைக்கும், தேவனுடைய இரக்கம் அவர்களுக்கு தேவைப்படும். நம்முடைய அப்போஸ்தலனாகிய பவுல் இந்த கோட்பாட்டை நம்முடைய கவனத்திற்கு கொண்டுவருகிறார்- "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். " (ரோமர் 4:4)

சாத்தானும் அவனை பின்பற்றுபவர்களும் முழுமையாக அழிக்கப்பட்டபின் மனுக்குலத்திற்கு தேவனுடைய இரக்கம் அவசியப்படாது. (வெளிப்படுத்தல் 20:7-10) அவர்கள் அனைவரும் தேவனுக்கு முன்பாக நிற்கும் அளவுக்கு பூரண நிலையை அடைந்திருப்பார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு பாத்திரவான்களாக இருப்பார்கள். ஏனெனில் தேவனுடைய பிரமாணம் அவர்களின் இருதயத்தில் எழுதப்பட்டிருக்கும். அதன் பலனால் அவர்கள் பெற்ற பிரமாணங்களைப் பூரணமாகக் கடைபிடிப்பார்கள். ஆனால் அவர்களின் இரட்சிப்பிற்காக தேவன் காட்டிய இரக்கத்தை என்றென்றும் போற்றிப் புகழ்வார்கள்.

தேவனுடைய இரக்கத்தை சற்று கூடுதலாகப் பெற்ற ஒரு வகுப்பார் இன்று காணப்படுகிறார்கள். இவர்கள் தேவனிடத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுவார்கள். இவர்கள் தலையாகிய இயேசுவுக்கு சரீரமாக வளர்ச்சி அடைவார்கள். இவர்கள் மனுக்குலத்திற்கு தேவனுடைய இரக்கத்தை செயலாற்றும் கருவிகளாக இருப்பார்கள். இப்படியாக, இயேசுவைப் பின்பற்றுபவர்கள், தங்களுடைய சகோதரர்களோடும், இந்த உலகத்தோடும் தொடர்பு கொள்ளும்போது இரக்கம் காண்பிக்கக் கற்றுக்கொண்டு அதை பழகுவதற்கு ஊக்கமளிக்கிப்படுகிறார்கள்.

## இரக்கத்தை நேசித்தல்

மீகா தீர்க்கதரிசி பதிவு செய்திருக்கும் கட்டளையான வார்த்தைகள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கக்கூடிய அனைவருக்கும் பிரயோகம் உள்ளதாக இருக்கிறது. விசேஷமாக வருங்காலத்தில் கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக ஆயத்தப்படுபவர்களுக்கு இந்த வார்த்தைகள் மிகச் சரியாக பொருந்தக்கூடியதாக இருக்கிறது. "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். " (மீகா 6:8)

அவருடைய நீதிக்கு ஈடாக எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாது என்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலம் காட்டினாலும், அவர் இரக்கத்தை நேசிப்பதை இதனோடு இணைத்துள்ளார். ஒருவருக்கு காட்டப்படும் தனிப்பட்ட இரக்கத்தைப் பற்றி இங்கு மீகா குறிப்பிடாமல், அதை ஆழமாக உணர்ந்து கொண்டு நேசிப்பவர்களுக்கு எழுதினார். இப்படியாக, மற்றவர்களிடம் காட்டப்படும் இரக்கத்தையே நாம் நேசிக்கும்படிக்கு மீகா நம்மை எச்சரிக்கிறார். ஆனால் பழிவாங்குவதற்கான எண்ணங்களையும், பகைமையையும் நம்முடைய இருதயம் விரும்பினால் அல்லது மற்றவர்களிடம் சரியான நீதியை சரிக்கட்டவேண்டும் என்று விரும்பினால், நிச்சயமாக நாம் இரக்கத்தை சிநேகிப்பதாகக் கூறமுடியாது. (மத்தேயு 5:38-48)

இந்த கோட்பாடுகளை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினால், நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் செழிப்பாக வளரலாம் என்று தேவனுடைய வார்த்தைகளின் வழியாக கற்றுக்கொள்ளலாம். மற்றவர்கள் இரக்கம் காண்பிக்கும்போது நாம் அதை கண்டு பாராட்டினால் மட்டும் போதாது, அப்படிப்பட்ட இரக்கத்தை நாம் நேசித்து செயலாற்றவேண்டும் என்ற தேவனுடைய எதிர்பார்ப்பைப் பற்றி மீகா கூறுகிறார். நாம் இரக்கம் பாராட்டுவதைக் காட்டிலும், அந்த இரக்கத்தை அதிகமாக நேசிப்பதே பலமான இரக்கமாகும். கருணை, பரிவு, தயை, அன்பு போன்ற குணங்கள் நம்முடைய குணங்களோடு இணைந்திருப்பதினால், இரக்கம் பாராட்டுவது இயல்பான ஒரு காரியமாக இருக்கவேண்டும் என்று பொருள்படுகிறது. மேலும், நாம் மற்றவர்களிடம் இரக்கம் பாராட்டும் நேரத்தில் நம்முடைய இருதயம் பெரும் மகிழ்ச்சி அடையும்.

தங்களுடைய வீட்டை அடகு வைத்தவர்கள், கட்டவேண்டிய தொகையை குறைப்பதற்காக அமெரிக்க அரசாங்கம் திட்டம் வகுத்தபோது, இது வரைக்கும் தவறாமல் வட்டி கட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு ஏற்படும் அநியாயத்தைப் பற்றி மட்டுமே முதலில் சிந்தித்தேன். கிறிஸ்து தம்முடைய இராஜ்யத்தில் ஆளுகை செய்யும்போது, இப்படிப்பட்ட கோட்பாடுகள் எவ்வாறு பொருத்தப்படும் என்று சற்று எண்ணிப்பாருங்கள். வாழ்க்கையில் மிக மோசமாக தோல்வி அடைந்தவர்களுக்கும் தேவன் இரக்கம் பாராட்டும் போது நாம் சினங்கொள்வோமா? அல்லது மற்றவர்களை ஏமாற்றினவர்களும், அல்லது சொல்லமுடியாத அளவுக்கு தங்களுடைய ஜனங்களுக்கு தீங்கு செய்தவர்களும், தேவனுடைய இரக்கம் பெறுவது அல்லது அவர்கள் தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரவான்களாக இருப்பது, நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்குமா ?

இப்படியாக, நம்மை நாம் சோதித்து - இரக்கத்தை நேசிக்கக்கூடிய குணங்களை நம்முடைய சிந்தையில் அவசியமாக வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மீகா எச்சரித்து அறிவுறுத்துகிறார். இங்கு மற்றவர்களிடம் பாராட்டப்படும் இரக்கத்திற்கும், நாம் இரக்கத்தை பெறுவதற்கும் காத்து கொண்டிருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தைக் காணலாம்.

திரும்பக் கொடுக்க முடியாதபடிக்கு மனுக்குலம் பாவத்திற்குக் கடன்பட்டுள்ளது. நம்முடைய பரலோக தந்தை தம்முடைய குமாரன் வழியாகக் காட்டின இரக்கத்ததினால் மட்டுமே இந்த பாவம் மன்னிக்கப்படும். கிறிஸ்துவை பின்பற்றுவோர், தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில், அதாவது கடன் தீர்க்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பிதா மற்றும் அவரால் நேசிக்கப்பட்ட குமாரன் காண்பித்த இரக்கத்தின் மாதிரியை கிறிஸ்துவுக்குள் மன்னிப்பை பெற்றவர்கள் மற்றவர்களிடம் அதே இரக்கத்தைக் கட்டாயம் காட்ட வேண்டும். இந்த பூமியில், கிறிஸ்துவின் பூமிக்குரிய ஆட்சியின்போது, அதன் நிர்வாகத்தில் பங்குபெற வேண்டும் என்று விரும்பக்கூடியவர்கள் கட்டாயமாக இந்த இரக்கத்தை சிநேகிக்கவேண்டும்.

## பேதுரு

அப்போஸ்தலனாகிய பேதுருவோடு இயேசு பேசுகையில், தம்முடைய இரக்கத்தை குறித்து மற்ற அனைத்து சகோதரர்களுக்கும் ஒரு மாதிரியைக் காண்பித்தார். திபேரியா கடற்கரையின் அருகில் உயிர்த்தெழுந்த இயேசு, தம்முடைய சீஷர்களை சந்தித்தபொழுது இயேசுவை மறுதலித்த பேதுரு நிச்சயமாகவே, தான் இயேசுவால் கடிந்துகொள்ளபடப் போகிறோம் என்று எதிர்பார்த்திருக்கவேண்டும். (யோவான் 21:1-19) அதற்கு பதிலாக பேதுரு என்ன சொல்லுவார் என்பதை அறிந்து, இயேசு, ஒரு கேள்வியைக் கேட்டார் - "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா ? (வசனம் -15)


பேதுரு மீன் பிடிக்கும் தொழிலை விட்டுவிட்டு, இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக்கு இயேசுவின் இரக்கம் அவரை ஏவியது. மேலும் பேதுருவின் பதில், அவருக்கு நல்லதோர் எச்சரிப்பாக பயன்படுத்தப் பட்டது. பேதுரு இயேசுவினிடத்தில் இரக்கம் பெற்றதுபோல, தம்முடைய யூத சகோதரர்கள் மற்றும் தேவனால் அழைப்பு பெற்ற புறஜாதியிடத்திலும், இரக்கமாக இருக்க வேண்டும் என்று அந்த கேள்விகள் மூலம் இயேசு பேதுருவுக்கு ஆலோசனை கூறினார். மேலும், அபாத்திரராகவும், பலவீனராகவும் இருப்பவர்களுக்கு இன்னும் அதிகமான இரக்கத்தை காண்பிக்கவேண்டும் என்ற பாடத்தை பேதுரு கற்றுக்கொண்டது போல நாமும் கற்றுக்கொள்ளவேண்டும்.

"இரக்கம், சாந்தம், மன்னிப்பு போன்ற குணங்களை பிரயோகப்படுத்துவதினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நம்முடைய இரட்சிப்பு நிறைவேறும் என்ற நன்மைகளை மட்டும் நாம் பெறாமல், அதற்கு மேலும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். சில நேரங்களில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட நிலையில், "மாம்சத்தின் படி நடவாமல், ஆவியின்படி நடக்க" விரும்பும் தேவனுடைய ஜனங்களை சில மாம்சத்தின் கிரியைகள் நீண்ட காலமாக பற்றிக்கொள்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், மேற்கூறப்பட்ட குணநலன்களை நாம் பெற்றிருந்தோமேயானால், மற்றவர்களின் அபூரணமான நிலைகளையும், தோல்விகளையும் உணர்ந்து நம்மை இறுகப் பற்றிக்கொண்டிருக்கும் மாம்சத்தின் கிரியைகளையும், சாத்தானின் செயல்களையும் நீக்க உதவும். " - (Reprints, p. 2587)

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். " (மத்தேயு 5:7)

அவர் கிருபை என்றுமுள்ளது

# இஸ்ரவேலுக்கு தேவன் பாராட்டிய இரக்கம்



*கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி, பின்னும் இஸ்ரவேலரைத் தெரிந்துகொண்டு, அவர்களை அவர்கள் தேசத்திலே தாபரிக்கப்பண்ணுவார்; அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி, யாக்கோபின் வம்சத்தோடே கூடிக்கொள்வார்கள்.-ஏசாயா 14 :1*

**Regis Liberda**

மனுக்குலத்தை இரட்சிக்கவும், ஆதாமின் வழியாக வந்த பாவம் மற்றும் மரணத்திலிருந்து அவரை மீட்பதும் "தேவனுடைய அடிப்படை நோக்கம் என்று முழு வேதாகமமும் விவரிக்கின்றது." இந்த மனுகுலத்தை இரட்சிப்பதற்கு தன்னுடைய ஜீவனை கொடுத்த அவருடைய குமாரனாம் இயேசு, இந்த திட்டத்தில் முக்கிய பங்கை வகிக்கிறார். (எபிரெயர் 2:9)

தேவன் தன்னுடைய விசேஷித்த செயல்களை நடப்பிக்கிறதற்கும், உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கும் தனி நபர்களோடு தொடர்பு கொண்டார் என்பதை புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாடு நமக்கு காட்டுகிறது. முதல் முதலில் ஒரு விசேஷித்த வேலைக்காக ஆபிரகாம் தேர்வு செய்யப்பட்டார். ஆபிரகாமின் செயல்கள் தேவனுடைய கண்களில் அருமையாக இருந்ததால் அவர் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டார். (யாக்கோபு 2:23) தேவன் ஆபிரகாமை தேர்வு செய்த காரணத்தினால், அவருடைய திட்டத்தில் இஸ்ரயேலின் முக்கிய பாத்திரமாக ஆபிரகாமின் சந்ததி, சிறிதும் பிசகாமல் செயல்பட்டது.

## ஆபிரகாமின் தேர்வு

புறஜாதி தேசத்தில் வாழ்ந்த ஆபிரகாமை வருங்கால இஸ்ரயேல் ஜாதியின் தந்தையாக தேவன் தேர்வு செய்ததன் காரணம் என்ன ? தேவன் ஆபிரகாமை அழைத்தபோது அவர் தேர்வு செய்யப்பட்ட காரணத்தை நாம் அறியாதபோதிலும், ஆபிரகாமின் வாழ்க்கையில் வெளிப்பட்ட விசுவாசம், பொறுமை, மற்றும் கீழ்ப்படிதல் போன்ற குணங்களே தேவனுடைய தேர்வுக்கு காரணமாக அமைந்தது என்று நாம் அறிந்துக்கொள்ளலாம். ஆபிரகாமின் வாழ்க்கை முழுவதிலும் தேவனுடைய நல்மதிப்பைப் பெற்றிருந்தார். "என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே, நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து: நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்று சொன்னேன்." (ஏசாயா 41:8,9)

"தேவனுடைய சிநேகிதன்" என்ற உயர்ந்த நிலையை ஆபிரகாம் தேவனோடு பெற்றிருந்தார் என்ற காரியத்திற்கு அவர் இஸ்ரயேலுக்கு கொடுத்த வாக்குறுதியே சாட்சியாக இருக்கிறது.

ஆதாமிலிருந்து 20ம் தலைமுறையிலும், நோவாவிலிருந்து 10ம் தலைமுறையிலும், ஆபிரகாம் பிறந்தார். ஆகவே பிதாவாகிய தேவன் தம்முடைய தனித்துவம் வாய்ந்த பணியை செய்வதற்கு அதாவது மனிதனை மீட்கும் நீண்ட கால பணியில், இந்த ஜனங்களின் சார்பாக தம்மோடு விசேஷித்த தொடர்பு கொள்வதற்கு உகந்தவர் ஒருவரை தேர்வு செய்ய நீண்ட காலம் காத்திருந்தார்.

இந்த விசேஷித்த உறவுக்காக - ஆபிரகாமின் சந்ததியை - தேவன் ஏன் தேர்வு செய்ய வேண்டும்? ஒவ்வொரு தேசத்தில் இருந்தும் தனித்தனி தீர்க்கதரிசிகளை அழைப்பித்து தேவனைப்பற்றி மனுக்குலத்திற்கு அறிவித்து, விக்கிரகங்களை அழித்து, தன்னை வணங்கும் தேசங்களை ஆசீர்வதித்து, மற்ற தேசங்களை தண்டித்திருக்கலாமே? தேவன் இந்த ஒரு தேசத்தை தேர்வு செய்த காரணம் என்ன?

ஆபிரகாமின் சந்ததியார், சில நேரங்களில் நல்ல மாதிரிகளையும், பல நேரங்களில் தவறான மாதிரிகளையும் காண்பிப்பார்கள் என்று முன்னறிந்த தேவன் அவர்களின் விதிவிலக்கான தந்தையின் வம்சத்தை தேர்வு செய்தார். (1கொரிந்தியர் 10:1-11) இஸ்ரயேலரின் அதிகப்படியான கீழ்ப்படியாமையின் செயல்களும், அவர்களின் பயங்கரமான பக்தி வைராக்கியமும், விசுவாசத்தின் செயல்களும் - பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டிலும் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்கும் குறிப்பிட்ட இந்த ஜாதிக்கும் உள்ள தொடர்பை வேதாகமம் மட்டுமே தெளிவாக விவரிக்கிறது. நன்மை மற்றும் தீமையான அனுபவங்களின் வழியாக தேவன் மனிதனிடம் கொண்டுள்ள சித்தத்தை, வேதாகமத்தைப் போல வேறு எந்த புத்தகமும் இவ்வளவு தெளிவாக வெளிப்படுத்துகிறதில்லை.

இவர்களின் அனுபவங்களில் தேவனுடைய சித்தத்தை மட்டும் அல்ல ஆபிரகாமின் சந்ததிக்காக அவர் காட்டிய இரக்கமும், அன்பும் அதிகமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் இப்படிப்பட்ட கிருபையை முழு மனித குடும்பத்திற்கும் பாராட்டுவார். (லூக்கா 3:6) இப்போது இஸ்ரயேலரிடம் தேவன் காட்டிய இரக்கங்களைக் காணலாம்.

## எகிப்திலிருந்து விடுதலை

பஞ்சகாலத்தின் போது கானான் தேசத்திலிருந்து எகிப்திற்கு சென்ற யாக்கோபு மற்றும் அவரின் குடும்பத்தாரை பற்றிய விபரங்களை ஆதியாகமம் கடைசி அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் புதிய பார்வோன் அரசனின் வரவுக்குப்பின், எகிப்தில் யாக்கோபின் சந்ததிக்கு இருந்த சாதகமான சூழ்நிலை மாறியது. இஸ்ரயேலர்கள் கசப்பான அடிமைத்தனமான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டார்கள். "இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து

எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்." (யாத்திராகமம் 3:9)

இந்த சிறையிருப்பை முன்னதாக அறிந்த தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார். (ஆதியாகமம் 15:13) ஆகையால் எகிப்தின் வடகிழக்கு திசையில் உள்ள கோசேன் அவர்களுக்கு சொந்த தேசமாக கொடுக்கப்படாமல், தேவன் கானான் தேசத்தை வாக்களித்தார் என்று ஆபிரகாமின் பிள்ளைகள் ஒருவேளை நினைவு கூர்ந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வேளையில் நைல் நதியின் செழுமையிலிருந்த எகிப்தைக் காட்டிலும் சரியான சீதோஷணங்களும், மண் வளமும் இல்லாத கானான் தேசத்திற்கு திரும்பி செல்ல இஸ்ரயேலர்களுக்கு மனதில்லாமல் இருந்தது.

தேவன் எகிப்தை அல்ல, உண்மையில் கானான் தேசத்தையே வாக்களித்திருந்தும் எகிப்தை விட்டு ஆபிரகாமின் சந்ததி வெளியேறுவதற்கு சில சம்பவங்களை நடப்பிக்க வேண்டியதாக இருந்தது. சாதகமான சூழ்நிலையில் இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறி இருந்தால் புதிதாக வந்த பார்வோனின் கொடுங்கோல் ஆட்சிக்கு இவர்கள் தப்பியிருக்கலாம்.

எகிப்திலிருந்து இஸ்ரயேலரை மீட்பதற்கு - பார்வோனிடம் பேசும்படி தேவன் மோசேயை அழைத்தார். உடனடியாக கிடைக்கவேண்டிய விடுதலை, எகிப்திற்கு விரோதமாக ஒன்பது வாதைகள் நடப்பிக்கப்பட்ட அந்த நீண்ட நாட்களுக்கு பின்பும் எந்தவிதமான விடுதலையும் கிடைக்கவில்லை. பத்தாம் வாதை நடந்தபின் இஸ்ரயேலர்களை அனுப்புவதற்கு பார்வோன் சம்மதித்தான்.

இஸ்ரயேலரின் வரலாற்றில் நடந்த இந்த ஒரு விடுதலை மிக முக்கிய சம்பவமாக கருதப்படுகிறது. தேவன் அவர்களுக்குத் தந்த மீட்பு - அவர்கள் மேல் தேவன் வைத்த இரக்கத்திற்கு மிகப்பெரிய அடையாளமாக இருந்தது. ஆனால் தேவன் இந்த மனுக்குலத்திற்குக் காட்டப்போகிற இரக்கத்திற்கு அதைவிட மிகப்பெரிதான அடையாளமாக இந்த சம்பவம் இருக்கிறது. இந்த பெரிதான இரக்கத்தை நிகழ்த்துவதற்கு, இயேசு சிலுவையில் மரித்தார். (1யோவான் 2:2) எகிப்தின் அடிமைதனத்திலிருந்து இஸ்ரயேலர்களை விடுவித்தபின், அவர்களுக்கு சில முக்கியமான பாடங்களைக் கற்பிப்பதற்கு, சோதனையின் காலத்தில் தேவனுடைய இரக்கம் காண்பிக்கப்பட்டது. மேலும் சிவந்த சமுத்திரத்தில் எகிப்தின் சேனை அழிந்த பின், அவர்களின் வல்லமை நீண்ட காலத்திற்கு வலுவிழந்து குன்றிப்போகும்படி தேவன் சம்பவங்களைச் செயல்படுத்தினார்.

## வனாந்தரத்தில் முறுமுறுப்பு

எகிப்திலிருந்து விடுதலை பெற்ற சந்தோஷத்தை இஸ்ரயேலர்கள் குறுகிய நாட்களுக்கு மட்டுமே அனுபவித்தார்கள். ஏனெனில், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு செல்லுமுன் ஒரு வனாந்தரத்தை அவர்கள் கடக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தார்கள். வனாந்தரத்தில் பயணம் செய்யும் ஜனக்கூட்டம் நல்லபடியாக பயணிப்பதற்கு, தங்களுடைய அடிப்படை தேவைகளான உணவு, தண்ணீர், பாதுகாப்பு போன்ற காரியங்களைக் குறித்த பிரச்சனைகளை சமாளிக்க வேண்டும். இஸ்ரயேல் ஜாதியை அற்புதமாக இரட்சித்த தேவன் வனாந்தரபயணத்தில் அவர்களுக்குத் தேவையான உணவையும் தண்ணீரையும் கொடுப்பார் என்று எதிர்பார்ப்பது நியாயமா ? இஸ்ரயேலரின் பொறுமையைக்

| | இடம் | முறுமுறுப்புக்கான காரணங்கள் | தேவன் என்ன செய்தார் |
|---|---|---|---|
| யாத்திராகமம் 14:10-12 | சிவந்த சமுத்திரம் | பார்வோனின் பயமுறுத்தல் | கடல் மூடப்பட்டு எகிப்தின் சேனை அழிந்தது |
| யாத்திராகமம் 15:23,24 | மாரா | தாகம் | கசப்பான தண்ணீர் தித்திப்பானது |
| யாத்திராகமம் 6:2,3 | வனாந்தரத்தின் பாவம் | பசி | மன்னா கொடுத்தார் |
| யாத்திராகமம் 17: 2,3 | ரெவிதீம் | தாகம் | கன்மலையைப் பிளந்து தண்ணீர் கொடுத்தார் |
| யாத்திராகமம் 32 :1 | சீனாய் | மோசே இல்லாத காரணம் | மூவாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் |
| எண்ணாகமம் 11 :1 | தபேரா | | அநேகரை அக்கினி விழுங்கியது |
| எண்ணாகமம் 11:4-6 | தபேரா | மன்னா சலித்து போனது | கொள்ளை நோய் வந்தது |
| எண்ணாகமம் 14: 2-4 | காதேஷ் | அவிசுவாசம் | 40 வருட பிரயாணம் |
| எண்ணாகமம் 16 :19 | வனாந்தரம் | தலைமைக்குப் போட்டி | கோராகு... பூமி விழுங்கியது |
| எண்ணாகமம் 16 :41 | வனாந்தரம் | கோராகின் மரணம் | வாதை |
| எண்ணாகமம் 21: 4,5 | ஏதோம் அருகில் | முடிவில்லாத பயணம் | கொள்ளிவாய் சர்ப்பங்கள் |

குறித்து வேதாகமம் நமக்கு எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவர்களின் முறையீடுகளையும், முறுமுறுப்புகளையும் பற்றி அதிகமாக குறிப்பிடுகிறது. இவர்கள் முறுமுறுத்த காரியங்களைக் குறித்த பட்டியலை பக்கத்தின் முடிவில் காணலாம்.

இன்றைக்கு எதிர் நோக்கும் கஷ்டங்களிலும், பிரச்சனைகளிலும் தேவனஆசீர்வாதங்களை மனிதர்கள் எவ்வளவு சீக்கிரம் மறந்துவிடுகிறார்கள், இஸ்ரயேலர்கள் முறுமுறுத்த சம்பவங்களை நாம் பார்க்கும்போது தேவன் நியாயமாக அவர்களை தண்டித்திருக்கலாம். ஆனால் நான்கு முறைகளுக்கு ஒரு முறை தேவன் அற்புதமாக அவர்களை ஆசீர்வதித்தார். அடுத்தபடியாகவும் அவர்கள் மீண்டும் மீண்டும் முறுமுறுத்தார்கள். நிச்சயமாக அவர்கள் இதை செய்திருக்கக்கூடாது. நடந்த ஒவ்வொரு காரியத்திற்கும் தேவன் அவர்களை தண்டித்திருக்கலாம்.

ஆயினும், நாற்பது வருடங்களாக அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்க காத்திருந்தும் தேவன் அவர்களுக்கு உதவி செய்தார் என்று நாம் சொல்லலாம். நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கும் வரைக்கும் ஒவ்வொரு முறையும் அவர்கள் முறுமுறுத்த பின்னும் தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். சீனாய் மலையில் தேவனுடைய கற்பனைகளைப் பெற்றபின், தேவனுடைய சித்தத்தையும், அந்த கற்பனைகளைக் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புகளைப் பற்றிய அறிவை அவர்கள் அதிகமாகப் பெற்றார்கள். அதற்குபின் ஒவ்வொரு பாவத்திற்கும், சட்டத்தின்படி அதற்குரிய தண்டனை இருந்தது.

## நியாயாதிபதிகள் மற்றும் ராஜாக்களின் காலம்

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் இஸ்ரயேலர்கள் நுழைந்தபோது அது பாலும் தேனும் ஓடுகிற பரதீசாக இருக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கக் கூடும் அல்லவா ? இவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தால் (உபாகமம் 28:1-14) இந்த விதிமுறையின்படி நடந்திருக்கும். ஆயினும் விக்கிரக ஆராதனையினால் ஏற்பட்ட சோதனை, தேவனுக்காக அவர்கள் கொண்டிருந்த உண்மையான கீழ்ப்படிதலை மேற்கொண்டது.

நியாயாதிபதிகளின் காலத்தில் கீழ் கொடுக்கப்பட்ட சம்பவங்கள் 7 வித்தியாசமான காலப் பகுதிகளில் தொடர்ந்து நடந்தது.

1. கீழ்ப்படியாமை மற்றும் விக்கிரக ஆராதனை
2. எதிரிகள் மூலமாக நெருக்குதல் மற்றும் படையெடுப்பின் வழியாக தேவனுடைய தண்டனை

• கடந்த நாட்களில் கொடுத்த 3. மனம் திரும்பி மன்றாடி தேவனிடம் சேருதல்

4. புதிய நியாயாதிபதி மூலமாக எதிராளிகளிடமிருந்து மீட்பு.

இவைகளின் பதிவை கீழே காணலாம்.

| | கொடூரமான ஆட்சியாளர் | இரட்சிப்பவர் | சமாதானத்தின் காலம் |
|---|---|---|---|
| நியா 3:9 | மெசொப்பொத்தாமியர் 8வருடங்கள் | ஒத்னியேல் | 40 வருடங்கள் |
| 3:15 | மோவாபியர் (எக்லோன்)-18 | ஏகூத் | 80 வருடங்கள் |
| 4:4 | கானானியர் -யாபீன் -20வருடங்கள் | தெபோராள் | 40 வருடங்கள் |
| 6:7 | மீதியான் -7வருடங்கள் | கிதியோன் | 40 வருடங்கள் |
| 9: 1-57 | அபிமலேக்கு - 3வருடங்கள் | தோலா | 45 வருடங்கள் |
| 11: 32 | பெலிஸ்தர் /அம்மோனியர்-40 | யெப்தா | 31 வருடங்கள் |
| 13 :24 | பெலிஸ்தர் - 40 வருடங்கள் | சிம்சோன் | 20 வருடங்கள் |
| 1சாமு 7:4 | பெலிஸ்தர்20 வருடங்கள் | சாமுயேல | |

பொதுவாக, அடுத்த தண்டனைக்கு முன்பாக நாற்பது வருடங்கள் இஸ்ரயேலர்களின் சமாதான காலம் நீடிக்கும். அதில் ஒரு புதிய தலைமுறை பிறந்து, வளர்ந்து, திருமணம் செய்து தேவனுடைய சட்டங்களை மறந்து விடுவதற்கு போதுமான காலஅளவாக இருந்தது. தேவனுடைய சட்டத்திற்கு சூழ்ச்சியான கீழ்ப்படியாமை ஏன் ? இதற்கான பதிலை மனுஷடைய இயல்பான செயலில் காணலாம். உறுதியான சட்டம் இல்லாமல், பணம், பதவி, இன்பங்கள் மற்றும் பல உலகக் காரியங்களை, சட்டத்திற்கு புறம்பான முறையிலும், தவறான வழிகளிலும் எளிதில் அடைவதை, மனுஷன் தேடுகிறான்.

ஆயினும், இப்படிப்பட்ட காரியத்தை இஸ்ரயேலில் தேவன் அனுமதிக்கவில்லை. அதற்கு பதிலாக அவர்களின் செயலுக்கு தக்க தண்டனையளித்தார். அதன் விளைவாக அவர்கள் தேவனின் இரக்கத்திற்காக வேண்டினார்கள். இப்படியாக, தேவன் தம்முடைய ஜனத்திற்கு எட்டுமுறை இரக்கம் காண்பித்தார்.

ஒரு முறை இஸ்ரயேலுக்கு ஒரு இராஜா கொடுக்கப்பட்டார். அந்த தேசத்தின் நல்லொழுக்கத்தை பொறுத்தவரையில் அவர் ஒரு முக்கிய பங்கைப் பெற்றிருந்தார். மோசமான இராஜாக்கள் வெகு சுலபமாக ஜனங்களை விக்கிரக ஆராதனைக்கு நடத்தினார்கள். நல்ல இராஜாக்களோ கடுமையாக முயற்சித்து அந்த ஜனங்க்ளை மீண்டுமாக தேவனிடத்தில் சேர்த்தார்கள்.

இஸ்ரயேல் மற்றும் யூதா இராஜாக்களையும் பற்றி பதிவு செய்திருக்கும் இராஜாக்களின் புஸ்தகத்தில் எட்டு இராஜாக்கள் தேவனுடைய பார்வையில் நன்மையானதையும் மற்ற 31 இராஜாக்கள் தீமையானதை நடப்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் எளிமையான நியாயாதிபதிகள் மூலம் செய்த ஆட்சியை இஸ்ரயேல் ஜனங்கள் புறக்கணித்து, புறதேசத்தாரைப்போல ஒரு இராஜாவை அவர்கள் விரும்பியதின் பின்விளைவை இந்த பரிதாபமான கணக்கெடுப்பு காட்டுகிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரயேலர்கள் விக்கிரக ஆராதனையினால் ஈர்க்கப்பட்டார்கள். ஆனால் தேவன் அவர்களை தண்டித்து அவர்களுக்கு மன்னிப்பைத் தந்து ஒரு புதிய நியாயாதிபதியை கொண்டு அவர்களை விடுவித்தார்.

இராஜாக்களின் காலத்தில் ஜனங்களுக்கு முன்பாக இராஜாக்களின் பொறுப்புகளை தேவன் முதன்மை படுத்தினார். நல்ல இராஜாக்கள் ஆட்சி செய்தாலும் சரி, வரக்கூடிய தண்டனை தீர்மாணிக்கப்பட்டது. அதில், இஸ்ரயேல் தேசத்தின் பத்து கோத்திரத்தார் அசீரியாவுக்கும், யூதா இராஜ்ஜியத்தின் இரண்டு கோத்திரம் பாபிலோனுக்கும் கொண்டு செல்லப் பட்டதே மோசமான தண்டனையாகும். இவர்கள் நாடுகடத்தப்படுமுன், இவர்களின் தண்டனை முன்னதாக அறிவிக்கப்பட்டு எச்சரிப்பைப் பெற்றார்கள். இது தேவனுடைய கிருபையினால் அவர் கொண்டிருந்த நீடிய பொறுமையைக் காட்டுகிறது. (11பேதுரு 3:9) அவர் நீதியின்படி உடனடியாக தண்டிப்பதற்கு வாய்ப்பிருந்தும் அவர் தாமதித்தார்.

## பாபிலோனிலிருந்து திரும்பியபின்

பாபிலோனுக்கு சிறைப்பட்டுச் சென்ற காரியம், தேசிய அளவில் மிகப் பெரிய துன்பத்தையும், துக்கத்தையும் வருவித்தது. ஏனெனில், தேவனால் தேர்வு செய்யப்பட்ட ஜனங்கள் தங்களுடைய தேசிய அளவிலான அடையாளத்தை இழந்தார்கள். தண்டனையின் காலம் நிறைவடைந்தபோது பெர்சிய இராஜாவாகிய கோரேஸ் ஜனங்களை கானான் தேசம் திரும்புவதற்கு அனுமதித்தார். வரலாற்றைப் பொருத்தவரையில், இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய அடையாளத்தைத் தொலைத்தப்பின், தங்களுடைய தேசத்திற்கு எழுபது வருடங்களுக்குப்பின் திரும்பியது தேவனுடைய இரக்கத்திற்கு சிறந்த சாட்சியாக இருந்தது.

அடுத்து, கிரேக்க இராஜாவாகிய அந்தியோகியா, தங்களுடைய விக்கிரகங்களை ஆராதிக்க மறுத்த யூதர்களை துன்புறுத்திய போது இஸ்ரயேலுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. அந்தியோகியாவின் கொடூரமான செயல்களைக் குறித்து "மக்கபேரின்" புத்தகங்கள் விவரிக்கிறது. இராஜாக்களின் காலத்தில், இஸ்ரயேல் ஜனங்கள் தேவன் மேல் கொண்டிருந்த ஆழமான வைராக்கியத்தைக் காட்டிலும், இப்பொழுது அதிகமான வைராக்கியத்தைக் கொண்டிருந்தாலும் இந்த வேதனைகள் அனுமதிக்கப்பட்டது. ரோம இராஜ்யம் வரும் வரைக்கும் மக்கபேயருக்குள் தேவன் கலகத்தை ஏற்படுத்தினார். இப்படிப்பட்ட தேவனுடைய இரக்கத்தினால், இஸ்ரயேலுக்கு கொஞ்ச காலம் விடுதலை கிடைத்தது. உடனடியாக ஏற்பட்ட இந்த சம்பவங்கள் இயேசுவின் காலம் வரைக்கும் இஸ்ரயேல் ஜனங்களின் அடையாளத்தை காத்துக்கொண்டது.

## இயேசுவின் காலம்

" காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்."(கலா 4:5) இயேசு மற்ற தேசங்களுக்காக அல்ல தேர்வு செய்யப்பட்ட இஸ்ரயேலுக்காக, வந்தார் என்ற உண்மை, தேவனுடைய இரக்கத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. ஒரு வேளை தீரு போன்ற பட்டணங்களுக்கு இயேசு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும் ? மேசியா இஸ்ரயேலுக்கு வரவேண்டும் என்பதை பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களினால் நாம் அறிந்திருந்தாலும், இயேசு வந்தபோது, அவர்மேல் இஸ்ரயேலர் கொண்டிருந்த விசுவாசத்தை மற்ற புறதேசத்தார்களோடு ஒப்பிட்டுப் பேசினார். ஆகவே, இஸ்ரயேலை தவிர மற்ற தேசங்கள், தேவனுடைய இரக்கத்தைப் பெற்று, கிறிஸ்துவின் வருகையை அங்கீகரித்திருப்பார்களா ?

ஆயினும், கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம், தேவனுடைய இரக்கமானது முழு தேசத்திற்கும் ஆசீரைப் பெற்றுத் தந்தது. மேலும், தனிப்பட்ட யூதர்களுக்கும் அது ஆசீர்வாதமாக இருந்தது. இயேசுவினால் அற்புத விதமாக சுகம் பெற்று, போஷிக்கப்பட்டு, மரணத்திலிருந்து எழுப்பப்பட்டதினால் தேவனுடைய கிருபையைப் பெற்றவர்கள் எத்தனை பேர் ? "அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை." (யோவான் 12 :37)

இஸ்ரயேல் தேசம் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாததினால் அவர்களுக்கு வரக்கூடிய கடுமையான தண்டனையை குறித்து இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தார். (மத்தேயு 23:37-39, லூக்கா 13:34,35) "பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்." (லூக்கா 21:24) என்று இயேசு உரைத்தார். ஆயினும், இந்த தண்டனைக்குரிய பயமுறுத்தலை இரக்கத்தின் வாக்குறுதி தொடர்ந்தது.

## இயேசுவின் மரணத்திற்குப் பின்

இதுவரையிலும் எதிர்பார்க்காததும், அனுபவியாததுமான உபத்திரவ காலத்தை இஸ்ரயேல் ஜனங்கள் சுவிசேஷ யுகத்தின் "உபத்திரவ காலத்தில்" அனுபவித்தார்கள். நம்முடைய ஆண்டவர் உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்ததினால், இந்த உபத்திரவ காலத்தின் போது தேவனுடைய இரக்கத்தைக் காண்பது அரிதாக இருந்தது.

இந்த தண்டனையின் முதல் கட்டமாக எருசலேம் கி.பி. 70ல் அழிக்கப்பட்டது. இஸ்ரயேல் தேசம் பாழாக்கப்பட்டு, சகல ஜாதிகளுக்குள்ளும் அவர்கள் சிதறடிக்கப்படுவார்கள் என்று லூக்கா 21-ம் அதிகாரத்தில் இயேசு முன்னறிவித்த காரியங்கள், மிகத் துல்லியமாக நிறைவேறியது என்று நம்முடைய வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் "*War of the Jews*" என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

மற்ற தேசங்களில் வாழ்ந்த யூத ஜனங்களுக்கு, மத்திய காலப்பகுதி மிகக் கடுமையாக இருந்தது. யூதர்கள் அநேக வழிகளில் பாடுகளை அனுபவித்தார்கள்.

அந்த காலக்கட்டத்தில் நடந்த போர்கள், உபத்திரவங்கள், வியாதிகள் மற்றும் இடமாற்றங்களினால் அநேக ஜனங்கள் தங்களுடைய பூர்வீகத்தை இழந்து, தங்களுடைய அடையாளத்தைத் தொலைத்தார்கள். ஆனால் அநேக உபத்திரவங்கள், இடமாற்றங்கள் இன்னும்

பலவித கொடுமைகளின் மத்தியில் வாழ்ந்த இஸ்ரயேல் ஜனங்கள், சுமார் 2000 வருடங்களுக்குப் பின்னும் தங்களை விசேஷித்த ஜாதியாக, தங்களுடைய பூர்வீகத்தைக் காத்து கொண்டார்கள். பல நூற்றாண்டுகளாக அவர்கள் சிதறடிக்கப்பட்டிருந்தும், லூக்கா 21:24 இல் இயேசு தீர்க்கதரிசனமாகச் சொன்னவைகள் நிறைவேறினாலும் அவர்கள் தங்கள் பூர்வீகத்தைக் காத்துக் கொண்டதில் - தேவனுடைய இரக்கங்கள் மிக அருமையாக வெளிப்படுத்தப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில் அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டது போல, தேவனுடைய இறுதி நோக்கம் நிறைவடைவதற்கு, தம்முடைய ஜனங்களை மீண்டும் அவர்களுடைய தேசத்தில் கூட்டிச் சேர்ப்பது மிக அவசியமாக இருந்தது. (ஆமோஸ் 9:14,15) ஆயினும், 20ம் நூற்றாண்டில் ஒருவரும் கற்பனைகூட செய்து பார்க்கமுடியாத அளவுக்கு, ஒரு பயங்கரமான சோதனை நேரிட்டது. 6 மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டதால், அவர்கள் நம்பிக்கை இழந்தார்கள். கி.பி. 70-ம் வருடம் எருசலேமின் அழிவில் ஏற்பட்ட சேதத்தின் அளவை இதுவும் எட்டியது. சகல தேசங்களிருந்தும் யூதர்கள் தங்களுடைய தேசத்திற்கு திரும்புவதற்கு, இந்த பேரழிவே சரியான வழி என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆகையால், யூதர்களுக்கென்று கொடுக்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்ப இவர்களுக்கு வாய்ப்பு நேரிட்டது.

இஸ்ரயேல் தேசம் இரண்டாம் முறையாக பிறந்தபின் அவர்கள் பெற்ற தெய்வீக உதவிகளை நாம் காணலாம். பொதுவாக புவியியல் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்தே ஒரு தேசம் உருவாக்கப்படுகிறது என்று வரலாறு படிப்புகள் காட்டுகிறது. ஆனால் இஸ்ரயேல் ஜனங்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருந்தும், அவர்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்தபோது அவர்கள் மீண்டும் ஒரே ஜாதியாக இணைந்து செயல்படத் துவங்கிய காரியம் வரலாற்றிலே தனித்துவம் வாய்ந்தாக இருக்கிறது.

## வருங்காலத்தில் தேவனுடைய மிகப்பெரிய இரக்கம்


"யூதர்கள் தங்களுடைய தேசத்திற்கு திரும்பவும், தேவன் அவர்களோடு புதிய உடன்படிக்கையை ஸ்தாபிக்கவும், அவர்கள் சமாதானத்தோடு வாழவேண்டும்" என்பதற்கான அநேக பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள் - தேவனுடைய இரக்கத்தின் அடையாளமாக இருக்கிறது. இப்பொழுது இந்த தீர்க்கதரிசனங்கள் முழுமையாக நிறைவேற வில்லை என்றாலும், மிகப்பெரிய நிறைவேறுதலை இந்த உலகத்திற்கு தேவன் வாக்களித்திருக்கிறார். இதில் இயேசு இஸ்ரயேலின் வழியாக, முழு உலகத்தையும் பிதாவோடு இசைந்து வாழகூடிய ஒரு புதிய ஜீவனைக் கொடுப்பார். இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொண்டபின் புதிய உடன்படிக்கையின் கீழ் முதலில் இஸ்ரயேல் தேசம் ஆசீர்வதிக்கப்பட்டு, மற்ற தேசங்களோடு சமாதானமாய் வாழும். ஆனால் இன்னும் இது நடைபெறவில்லை. (மத்தேயு 6:10, ஏசாயா 40 :4,5)

"அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள்." (சகரியா 12:3) என்று தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். இஸ்ரயேலின் தேசத்தை மீண்டும் இல்லாமல் செய்வதற்கு இறுதி சோதனைகள் பயமுறுத்தும் என்பதை எசேக்கியேல் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகள் விவரிக்கிறார்கள். "எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன்; நகரம் பிடிக்கப்படும்; வீடுகள் கொள்ளையாகும்; ஸ்திரீகள் அவமானப்படுவார்கள்; நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள்; மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை." (சகரி 14:2) ஆனால் தேவன் இஸ்ரயேலர்களை இரட்சித்து கிருபையளிப்பார் என்று அடுத்த வசனம் கூறுகிறது.

"கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி, பின்னும் இஸ்ரவேலரைத் தெரிந்துகொண்டு, அவர்களை அவர்கள் தேசத்திலே தாபரிக்கப்பண்ணுவார்; அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி, யாக்கோபின் வம்சத்தோடே கூடிக்கொள்வார்கள்." (ஏசாயா 14:1) என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதுகிறார். (சகரியா 8:20-23) வருங்காலத்தில், தேவன் இஸ்ரயேலருக்கும், முழு மனுக்குலத்திற்கும் தன்னுடைய இரக்கத்தை செயலாற்றுவதைக் குறித்த தீர்க்கதரிசனமாகும். மற்ற தேசங்கள் மேல் அதிகாரம் செலுத்துவதற்கு இஸ்ரயேல் பணியமர்த்தபடாமல், தேவனுடைய ஆசீர்வாதங்களை முதலில் பெற்றுக்கொண்டு, முழு மனுக்குலத்திற்கு ஒரு மாதிரியாக முன்வைக்கப்படுவார்கள். இஸ்ரயேல் தேசம் பெற்ற ஆசீர்வாதங்களைக் காணும் மற்ற தேசங்கள் "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3, மீகா 4:2)

இப்படியாக, தேவனுடைய தீர்க்கதரிசனத்தின்படி அனைத்து தேசங்களும் இஸ்ரயேலோடு இணைந்து யாக்கோபின் பிள்ளைகளாக மாறுவார்கள். "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதி 28:14)

முழு மனுக்குலமும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு - இஸ்ரயேலர்களின் மேல் தேவன் காட்டும் இரக்கமே அவர்களை ஊக்கவிக்கும். அனைவரும் பெறப்போகிற ஆசீர்வாதத்திற்கு கிறிஸ்துவின் இராஜ்யம் ஊற்றாயிருக்கும்.



# சபையினிடத்தில் தேவன் காட்டும் அன்பு

" கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது." -சங்கீதம் 145:9

Homer Montague

பரலோகப் பிதா நீதியை தம்முடைய சிங்காசனத்தின் ஆதாரமாகக் கொண்டிருக்கிறார். ஆகவே, உண்மையில் தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவராயிருந்தாலும் அவருடைய பிரமாணத்தின் சட்டங்கள் அனைத்தும் முழுமையான நீதியில் செயலாற்றப்படுகிறது. தேவனுடைய இரக்கம் செயலாற்றவில்லை என்றால் தேவனுடைய ஞானமுள்ள சிருஷ்டிகள் யாராகிலும் தேவனுடைய பிரமாணத்துக்கு விரோதமாய் செயல்பட்டால், அதற்கு தக்க பலனை அடைவார்கள். (மரணம்)

இந்த மனுக்குலத்தின் தந்தையான ஆதாம் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டார். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:27) ஆதாம் மற்றும் ஏவாள் நித்தியத்திற்கும் பரிபூரண ஜீவனில் வாழ்வதற்கு தேவன் அவர்களை அழகான தோட்டத்தில் வைத்திருந்தாலும், இந்த நிலையை அவர்கள் பெறுவதற்கு பாத்திரவான்களா ? என்று சோதிக்கும்படியாக அதாவது ஆதாமுக்கு கீழ்ப்படிதல் இருக்கிறதா, என்பதை சோதிக்கும்படியாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார். ஆயினும், புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியை ஆதாம் மற்றும் ஏவாள் புசித்தார்கள், காலப்போக்கில் அதின் விளைவுகளை அனுபவித்து கீழ்ப்படியாமையின் தண்டனையாக மரணத்தை அடைந்தார்கள்.

லூசிபர் தேவனுக்கு எதிராக கலகம் செய்து மனுஷனை தீமை செய்ய தூண்டி, பாவத்திற்குள் விழவைப்பான் என்பதை முன்னறிந்த தேவன் (ஏசாயா 46:10) மனித குடும்பத்தை மரணத்திலிருந்து மீட்பதற்கு, ஏற்றக்காலத்தில் தன்னுடைய குமாரனையே பலியாகக்கொடுப்பதற்கு உலகத்தோற்றத்திலிருந்தே ஒரு இரக்கமான திட்டத்தை ஏற்பாடு செய்தார்.

## தேவனுடைய குமாரனுக்கு ஒரு மணவாட்டி

நித்தியமாக தேவனை ஆராதித்து, துதித்து அவரை நேசிப்பதற்காக அவருடைய தெய்வீகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருப்பதற்கு, தம்முடைய குமாரனுக்கு ஒரு மணவாட்டியை ஆயத்தப்படுத்த தேவன் விரும்பினார். இவர்கள் ஆதாமின் சந்ததியிலிருந்து அழைக்கப்பட்டார்கள். முன்னே பாவிகளாய் இருந்த இவர்கள் நீதியினிமித்தம் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு செவி கொடுத்து, கீழ்ப்படிந்து, பலிசெலுத்தி, தங்களுடைய ஆண்டவரின் சாயலுக்கு மறுரூபமாகிறார்கள்.

இப்படியாக, தேர்வு செய்யப்படும் வகுப்பில் அங்கத்தினர்களாக இருப்பதற்கு, முதலில், தேவன் மோசேயின் வழியாக இஸ்ரயேலருக்கு வாய்ப்பளித்தார். "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்."
(யாத்திராகமம் 19:5,6)

இப்படிப்பட்ட விசேஷித்த கிருபைகள், ஒழுங்குகள், கட்டளைகள் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டதினால், சகல ஜாதிகளுக்கும் மத்தியில், இவர்கள் தனித்துவம் வாய்ந்த ஜாதியாக இருந்தார்கள். காலங்கள் நிறைவேறிய போது இஸ்ரயேலை இரட்சிக்க, தேவன் கிறிஸ்துவை அனுப்பினார். அவர்களின் இரட்சகராக மாத்திரமல்ல, தங்களுடைய இராஜாவாகவும் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இதினிமித்தம் அவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த, பரிசுத்தமான ஆவிக்குரிய சபைக்கான உன்னத அழைப்பிற்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தையும் இழந்தார்கள். இதன் காரணமாக நம்முடைய ஆண்டவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதி கட்டத்தில் -" எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமறபோயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்." (மத்தேயு 23:37,38) என்று சொன்னார்.

## புற ஜாதிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய நம்பிக்கை

கிறிஸ்துவை மேசியாவாக இஸ்ரயேல் புறக்கணித்து, சுமார் 3-1/2 வருடங்களுக்குப்பின் இந்த அற்புதமான ஆவிக்குரிய நம்பிக்கை புறஜாதிகளுக்குக் கிடைத்தது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும்

குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது."
(எபேசியர் 1:3-7) என்று அப்போஸ்தலராகிய பவுல் விவரிக்கிறார்.

சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்த இரக்கமுள்ள நம்பிக்கையைக் குறித்து மற்ற வசனங்களும் விவரிக்கிறது. "இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;"(எபி 3:1)

## ஆவிக்குரிய பரிசை பெறுதல்

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."(பிலிப்பியர் 3:14) என்று பவுல் எழுதுகிறார். இந்த பரலோகத்தின் காரியங்களைப் பெறுவதற்கு, பூமியில் காணக்கூடிய காரியங்களை விட்டுவிட வேண்டும் என்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார். விசுவாசத்தோடு தங்களுடைய சிந்தையில் மறுரூபமாகுபவர்கள் கிறிஸ்து இயேசு பெற்றிருக்கும் கனம், மகிமை, அழியாமையில் இணைக்கப்பட்டு, விழுந்துபோன மனுக்குலத்தை தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுவதற்கு, ஏற்ற கருவிகளாக பயன்படுத்தப்படுவார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேவனுடைய இராஜ்யத்தில் பூமியின் முழுகுடும்பங்களும் அப்போது ஆசீர்வதிக்கப்படும். (தானியேல் 7:7,13, 14, 27)

"பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது."(1பேதுரு 1:2)
என்று பேதுரு கிறிஸ்துவின் சபையைக் குறிப்பிடுகிறார். அழைக்கப்பட்ட சபை ஜனங்கள் தங்களுடைய பூமிக்குரிய வாழ்க்கையில் தங்களுடைய நடத்தையினாலும், புரிந்து கொள்ளுதலினாலும் தேவனுடைய இரக்கங்களைப் பிரதிபலிக்கும்படி, தேவனுடைய பரிசுத்த ஆவி அவர்களைச் சுத்திகரித்து, தங்களுடைய வாழ்க்கையில் அவைகளை வெளிப்படுத்துவதற்கு, பரலோகப்பிதா அவர்களை விசேஷித்த பொக்கிஷங்களாக நடத்தி வருகிறார் என்று இந்த வசனம் நமக்கு வலியுறுத்துகிறது.

தேர்வு செய்யப்படும் இந்த வகுப்பில் பங்கடைவதற்கு ஜாக்கிரதையான உழைப்பும், உறுதியான மனநிலையும், கடும் முயற்சிகளும் தேவைப்படுகிறது. ஏனெனில் ஒவ்வொரு சபையின் அங்கத்தினரும் கிறிஸ்துவின் சாயலோடு தங்களை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய வார்த்தையின்மேல் கொண்டிருக்கும் விசுவாசத்தோடு, பலவிதமான ஆவியின் கனிகளையும், அதோடு கூட்டிச் சேர்க்கவேண்டும். வசனங்களில் உள்ள விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள், நம்முடைய அனுதின வாழ்க்கையை ஊக்கமளித்து, நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து செலுத்தின இணையற்ற ஈடுபலியை நாம் அனுதினமும் ஆழமாக உணர்ந்துக்கொள்ள வேண்டும். இதன் மகிமையான முடிவு, கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் அதிகமான உற்சாகத்தையும், ஆர்வத்தையும் கொடுக்கிறது. "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்."11பேதுரு 1:10,11

## சபையின் வளர்ச்சிக்காக

## தேவனுடைய இரக்கம்

சபையின் மீட்புக்காக தேவன் கொடுத்த மீட்கும் பொருள், அவருடைய இரக்கத்தை வெளிப்படுத்தியது. விழுந்துபோன மனித இனத்தின் அங்கத்தினர்களாகிய நாம் பாவத்தில் கருத்தரிக்கப்பட்டு துன்மார்க்கத்தில் உருவாக்கப்பட்டோம். (சங்கீதம் 51:5) விழுந்துபோன மனுக்குலத்தை மீட்கவேண்டும் என்ற கட்டாயம் தேவனுக்கு இல்லை. ஆனால் அவருடைய இரக்கமுள்ள அன்பு, தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, பலியின் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய தெய்வீக நீதியை சரிக்கட்டினார். " நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.... நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."(1யோவா 4:10, 1யோவ 2:2)

தேவனுடைய இரக்கம் பெந்தெகொஸ்தே நாளின் போது செயலாற்றத் துவங்கியது. அப்போது தேவனால் ஊற்றப்பட்ட அற்புதமான வரங்கள், அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதே நாளில் - "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது

உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது "(அப்போஸ்தலர் 2:38, 39)

என்று பேதுரு கூறினார். இந்நாள் வரையிலும் தேவனுடைய இரக்கம் தொடர்ந்துக்கொண்டே வருகிறது. கொர்நேலியு துவங்கி, தேவனுடைய இராஜ்யத்தில், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்ப தற்கான வாய்ப்பை புறஜாதிகளும் பெற்றார்கள்.

கிறிஸ்துவோடு கூட இந்த புதிய தொடர்பை உறுதிபடுத்தும்படியாக "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்." (எபேசியர் 1:13) என்று பவுல் எழுதினார். இந்த வாக்குறுதியின்படி இப்போது உடன்படிக்கை செய்த யாவரும் தங்களுடைய இருதயத்திலும் சிந்தையிலும் மாம்சத்தின் கிரியைகளுக்குப் பதிலாக ஆவிக்குரிய கனிகளை நிலை நிறுத்துவதற்கு, தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை இன்று நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் சாயல் வளர்ச்சி அடைவதற்கு கடுமையாக முயற்சிக்கும் ஒவ்வொரு விசுவாசியும், வெகு சீக்கிரம் மறுரூபமாக்கப்படுகிறார்கள். முடிவு பரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொள்பவர்கள், தேவனால் முன்னதாகவே பரிசுத்தவான்களுக்கென்று ஆயத்தப்படுத்தின எண்ணிலடங்கா வாக்குறுதிகளை இறுதியில் சுதந்தரித்துக்கொள்வார்கள். (11பேதுரு 1:2-4, 1பேதுரு 1:3,4) சபையை மீட்பதற்காக தேவனுடைய இரக்கத்தை வெளிபடுத்தும் மற்றொரு குறிப்பை பவுல் எழுதுகிறார். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."(1கொரிந்தியர் 6:20) மனித குடும்பத்தை பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்பதற்காக கிறிஸ்து தன்னுடைய ஜீவனை விலைக்கிரயமாக கொடுத்திருந்தாலும், இந்நாள் வரைக்கும் அவருடைய ஈட்டுக்கிரயம் சபைக்கு மட்டும் பிரயோகிக்கப்படுகிறது.

"நம்முடைய ஆண்டவராம் இயேசு உயிர்த்தெழுந்தபின் உன்னதங்களில் ஏறி தேவனுடைய சமூகத்தில் இந்த உலகத்திற்காக அல்ல, விசுவாச வீட்டாருக்காக தேவனுக்கு முன் நிற்கிறார். ஆகவே, எந்த விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், தேவனோடு ஒப்புரவாகுதலும், நித்திய ஜீவனுக்குரிய தெய்வீக இரக்கத்திற்காக ஒழுங்குகள் அனைத்தும் இந்த உலகத்திற்காக அல்ல, விசுவாசவீட்டாருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு அவர் விலை உயர்ந்தவர் என்று விசுவாசிக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே நீதிபரராகிய இயேசு கிறிஸ்து பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அவிசுவாசிக்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுவதற்கு தேவனிடத்தில் ஒருவரும் இல்லை. ஆகவே அவர்கள் பாவங்களும் மன்னிக்கப்படுவதில்ல, அவர்கள் தேவனோடு ஒப்புரவாகுவதுமில்லை. அவர்கள் இன்னும் மரணத்தீர்ப்பின் கீழ் இருக்கிறார்கள். நாமோ, இந்த உலகத்திற்குக் கொடுக்கப்பட்ட மரணத்தீர்ப்பிலிருந்து தப்பித்திருக்கிறோம்.." - Reprints, p. 4998

நாம் கிறிஸ்துவின் சரீரமாக தேர்வு செய்யப்பட்டிருந்தால், முடிவு பரியந்தம் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் விசுவாசமாக இருப்பது மிக அவசியம். ஆயினும் சிலர் தேவன் விரும்புகிறபடி முழு விருப்பத்தோடு தங்களை பலி செலுத்துவதற்கு மனப்பூர்வமாய் சம்மதிப்பதில்லை. அவர்கள் சபைக்கு வாக்களிக்கப்பட்ட மகிமை, கனம், அழியாமையைப் பெறாமல் போனாலும், அவர்கள் கர்த்தரை நேசித்து அவருடைய இரக்கமான ஆவிக்குரிய நன்மைகளை பெறுகிறார். இவர்கள் வெண் அங்கியை தரித்து குருத்தோலையைப் பிடித்தவர்கள் என்று வெளிப்படுத்தல் 7:9 ம் வசனம் விவரிக்கிறது. இவர்கள் தங்கள் வஸ்திரங்களை தோய்த்து வெளுத்தவர்கள் என்றும், இவர்கள் மிகுந்த உபத்திரவங்களை அனுபவித்தவர்கள் என்றும் 14,15 - ம் வசனங்கள் குறிப்பிடுகிறது. இவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை." (பிலிப்பியர் 3:14) தொடராதிருந்தால், இவர்கள் அந்த வஸ்திரத்தையும் பெற்றிருக்க மாட்டார்கள், அதை தோய்க்கவேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

## கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனுடைய இரக்கம்

கிறிஸ்துவ வாழ்க்கையில் அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றக்கூடிய விசுவாசிகளின் வாழ்க்கை முழுவதும், தேவனுடைய இரக்கம் நீடிக்கப்படுகிறது. ஆவியினால் ஜெனிபிக்கப்பட்ட விசுவாசிகள் பரலோகப் பிதாவோடு ஜெபத்தின் மூலம் தொடர்பு கொள்வதற்காக விசேஷித்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவ வாழ்க்கையில் சம்மந்தப்பட்டிருக்கும் எல்லா பிரச்சனைகளையும் தேவன் நன்கு அறிந்திருக்கிறார். ஏற்றக்காலத்தில் அவர்களின் சுமையைச் சுமப்பதற்கான பலத்தையும், தேவைப்படும் நேரத்தில் உதவிகளையும், தேவனை தேடுவதற்கான வழி நடத்துதலும், ஆறுதலும், ஊக்கமும் அளிக்கப்படுகிறது. "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்."(மத் 6:6)

பிதாவாகிய தேவன், விசுவாசிகளாகிய நம்மை, இயேசு கிறிஸ்துவின் வழியாக தம்முடைய குமாரர்களாக அங்கீகரித்திருக்கிறார். ஆயினும் அவருடைய பூரணமான சித்தத்தை, நம்முடைய குறையுள்ள மாம்சத்தில் நிறைவேற்றுவது இயலாத காரியம் என்பதை நாம்

அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே, நாம் அநேகமுறை தோல்வியடைவதினால், சோர்வடையலாம். ஆனால், இப்படிப்பட்ட அபூரண நிலையின் நிமித்தம் தேவன் நம்மை புறக்கணிப்பதில்லை.

" ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை."(ரோமர் 8:1) இரக்கமுள்ள இந்த வாக்குறுதி எவ்வளவு விசேஷித்ததாக இருக்கிறது!

தேவனுடைய மற்றொரு விசேஷித்த கிருபையை, சபையின் ஏற்பாடுகளிலும் காணலாம். அங்குள்ள கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களிடமிருந்து நாம் ஆறுதலையும், ஊக்கத்தையும் ஆதாரவையும் பெற்று வளர்ச்சி அடையலாம். இந்த கிறிஸ்தவ யுகத்தில் உலகெங்குமுள்ள சகோதரர்கள் இப்படிப்பட்ட ஐக்கியத்தினால் நன்மையடைந்துக்கொண்ட இருக்கிறார்கள்.

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?

அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்," (சங்கீதம் 133:1,2)

## தண்டித்து திருத்துவதன் மூலம் தேவனுடைய இரக்கம்

நம்மை திருத்துவதற்காக தேவன் பயன்படுத்தும் சில காரியங்கள் தேவனுடைய இரக்கத்தின் ஒரு ஆதாரமாக இருப்பதை அனைவரும் முழுமையாக புரிந்து கொள்ளமுடியாது. தெய்வீக சுபாவத்தை பெறக்கூடிய ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சாயலுக்கு மாறவேண்டும் என்று பரலோகப்பிதா எதிர்பார்க்கிறார். சில நேரங்களில் நாம் சோதனைகளில் இடறி, தேவனுடைய சிந்தையில் அல்லது வார்த்தைகளை சரியாக புரிந்துக்கொள்ளாமல், சரியான முடிவுகளை எடுக்காத காரணத்தினால் தெய்வீக நிலைக்கு ஏற்றபடி நம்முடைய வளர்ச்சி குன்றிப்போய்விடலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனால் கொடுக்கப்பட்ட ஒழுக்கமான கோட்பாடுகளை, அவருடைய அன்பான செயல்பாடுகளாக நாம் கண்ணோக்கவேண்டும். உடனடியாக, நாம் அவைகளுக்கு அடிபணிந்து, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய அங்கீகரிப்பை பெறும் அளவுக்கு தேவையான மாற்றங்களை வெளிப்படுத்தவேண்டும். " எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." (எபிரெயர் 12:11)

பவுலாக மாறிய சவுல், தேவனுடைய இரக்கங்களை அதிக அளவில் பெற்றிருந்தார் என்பது வெளிப்படையாக காணப்படுகிறது. கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துவது, தேவனுடைய சித்தம் என்ற சவுலின் எண்ணங்கள் - அவருடைய மீதி வாழ்க்கையில் அழிக்கப்படமுடியாத ஒரு பதிவை அவருடைய சிந்தையில் பதிந்தது. " நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல." (1கொரிந்தியர் 15:9) ஆயினும், பவுல் பெற்ற மன்னிப்பை அவர் தெளிவாக உணர்ந்ததினால், அவருடைய மீதியிருந்த வாழ்க்கையில் மிக வைராக்கியத்தோடு தேவனுடைய சித்ததை முழுமையாக செய்து முடித்தார். "ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது. ஆகையால் நானாகிலும் அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்துவருகிறோம், நீங்களும் இப்படியே விசுவாசித்திருக்கிறீர்கள்." (1கொரிந்தியர் 15:10,11)

எண்ணிக்கையில் அடங்காத சந்தர்ப்பங்களில் தேவனுடைய மன்னிப்பையும், இரக்கங்களையும் பெற்ற விசுவாசிகளாகிய நாம், நமக்கு விரோதமாக எழும்புவோரிடமும் இப்படிப்பட்ட இரக்கத்தைக் காட்டவேண்டும்
(மத்தேயு 6:12)

## சகோதரரியின் வழியாகக் காட்டப்படும் இரக்கம்

தேவனுடைய பரிசுத்தவான்கள் ஒருவர் ஒருவரிடம் பகிர்ந்துக்கொள்ளும் தங்களுடைய கிரியைகளின் வழியாக தேவன் அவருடைய இரக்கத்தை சபைக்கு வெளிப்படுத்துகிறார். பவுலும், பர்னபாவும் இணைந்து ஊழியம் செய்கையில், புறஜாதிகள் மத்தியில் ஊழியத்திற்காக ஒரு பயணத்தை மேற்கொள்வதற்கு, மாற்குவை அவர்கள் அழைத்துச்செல்ல திட்டமிட்டபோது, திடீர் என்று அவர் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பிவிட்டார்.
(அப்போஸ்தலர் 13:13, 12:25) கடந்த நாட்களில் நடந்ததை மனதில் வைத்துகொண்டிருந்ததினால், இரண்டாம் முறை சுவிசேஷ பயணத்தை மேற்கொள்ளும் போது, பவுல், மாற்குவை தன்னுடன் அழைத்துச்செல்ல மறுத்தார்.
(அப்போஸ்தலர் 15:36-40) பவுலின் செயல் பர்னபாவின் ஐக்கியத்தை முறித்தது. ஆகவே பவுலுடன் சீலாவும், மாற்குடன் பர்னபாவும் சீப்ரூவுக்கு பயணித்தார்கள்.

ஆயினும், பவுலின் ஊழியத்தின் முடிவில், மாற்கு வெகு விரைவாக வளர்ச்சி அடைந்து, பவுலினால் மிக உயர்வாக பாராட்டப்பட்டார். " லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்." (11தீமோத்தேயு 4:11)
இப்படியாக, தேவன் பவுலின் வழியாக மாற்குவுக்குக் காட்டின இரக்கம், சந்தேகத்திற்கு இடமின்றி ஊழியத்தில் அவருடைய விசுவாசமுள்ள முயற்சிகள், தேவனால்

அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டப்பட்டது என்ற உணர்வுகள் மாற்குவை பலப்பத்தியது.

### மற்றவர்களிடம் இரக்கம் காட்டுதல்


அபாத்திரமாக பெறக்கூடிய கருணையை "இரக்கம்" என்று இலஸ்டிரேட்டடு பைபில் (Illustrated Bible) விளக்குகிறது. அன்புள்ள கருணை என்ற வார்த்தையும் அதே பொருளைக் கொடுக்கிறது.

"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்." (11கொரிந்தியர் 1:3,4) என்று நாம் வாசிக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் நாம் சந்திக்கும் நபர்களுக்கு, நாம் தேவனிடத்திலிருந்து பெற்ற இரக்கத்தையும், சமாதானத்தையும் கொடுக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

நாம் தேவனுடைய சித்தம் செய்வதற்கு அவர் நமக்குள் கிரியை செய்கிறார். (பிலிப்பியர் 2:13) தயவான கிரியைகள் மற்றும், விசுவாசிகளுக்கு நாம் செய்யும் உதவிகள் அனைத்தும், பிதா தம்முடைய ஜனங்களுக்குக் காட்டும் இரக்கமாக இருக்கிறது. முடிந்த வரைக்கும் நம்முடைய சகோதரர்களின் மாம்சீக தேவைகளைப் பூர்த்திசெய்து, தனித்திருக்கும் கிறிஸ்துவின் சீஷர்களை சந்தித்து, அவர்களை ஊக்கப்படுத்தி, வியாதியாக இருப்பவர்களை தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு, எல்லா தேவைகளுக்கும் ஜெபத்தின் மூலம் உதவி செய்து, சபைகளுக்கான தேவைகளை முடிந்தவரைக்கும் விருப்பத்தோடு செய்துக்கொண்டு, இன்னும் சபை கூடுதலை விட்டுவிட்ட சகோதரர்களை சபைக்கு அழைத்துவருவது போன்ற காரியங்களில் தேவனுடைய இரக்கத்தை நாம் வெளிப்படுத்தலாம்.

இவை அனைத்தையும் கனிவான செயல்பாடுகளோடு நாம் வெளிப்படுத்தினால், அளவற்ற கிருபையால் நம்மை மீட்டு இரட்சித்த, தேவனுடைய தெய்வீகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாகும்படி அழைப்பு கொடுத்திருக்கும் நம்முடைய பரலோக பிதாவை பிரதிபலிப்பவர்களாக இருப்போம். " கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது." (சங்கீதம் 136:1)

# மனுக்குலத்தின் மேல்தேவன் காட்டும் இரக்கம்



கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன் - யாத்திராகமம் 34:6

Kent Humphreys

லோத் குறித்தும், அவர் வாழ்ந்த நாட்களில் சம பூமியில் உள்ள பட்டணங்களின் அழிவைக் குறித்தும் சொல்லும் போது வேதத்தில், "இரக்கம்" என்ற வார்த்தை ஆதியாகமம் 19:19-ல் முதல் முறையாகக் காணப்படுகிறது. சிமித்சோனியன் அமைப்பைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு பழங்கால பட்டணங்களும், பாபெத் -திரா (சோதோம்) மற்றும் நியுமிரியா (கொமரா) என்று அழைக்கப்பட்டது. இந்த இரண்டு பட்டணங்களில் ஒன்றான சோவார், வரக்கூடிய அழிவிலிருந்து தப்பிச்சென்று மறைந்துக்கொள்ள, லோத்தின் வேண்டுகோளுக் கிணங்க அழிக்கப்படாதிருந்தது. லோத் மற்றும் அவரின் குடும்பத்தாரையும் அந்த தூதர்கள் பாதுகாப்பாக கையைப் பிடித்து பட்டணத்திற்கு வெளியே அழைத்துச் சென்ற காரியம் - தேவன் லோத்தின் மேல் வைத்த இரக்கத்தைக் காட்டுகிறது.

சுவிசேஷ யுகத்தின் முடிவில் லோத்து பெற்ற அனுபவத்தை திரள் கூட்டத்தாரும் பெறுவார்கள். இவர்கள் மிக பெரிய அழிவிலிருந்து காக்கப்படுவார்கள். அவர்கள் மாம்சம் அழியும், அவர்களின் ஆவியோ இரட்சிக்கப்படும். தேவன் அவர்கள் மேல் வைத்த இரக்கத்தினிமித்தம் அந்த சமபூமியில் உள்ள பட்டணங்கள் அழிக்கப்பட்டது என்று குறிப்பிடப்படுவது நமக்கு மிகவும் ஆர்வமூட்டுகிறது. அந்த பட்டணம் துன்மார்க்கத்திலும் ஒழுக்கக்கேட்டிலும் இன்னும் பலவிதமான தீமைகளினால் நிறைந்திருந்தது. அவர்கள் இன்னும் அதிகமான பாவங்களைச் செய்து, தேவனுடைய இராஜ்யத்திற்கு அபாத்திரராகப் போய்விடாதபடிக்கு, தேவன் அவர்கள் மேல் வைத்த கிருபையினால், அவர்களின் வாழ்க்கையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.

**வசனங்களில் உள்ள இரக்கம்**

மற்ற புத்தகங்களைக் காட்டிலும் சங்கீத புத்தகத்தில் "இரக்கம்" என்ற வார்த்தை அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதல் முறையாக சங்கீதம் 4-ம் அதிகாரத்தில் இரக்கம் என்ற வார்த்தையை நாம் காணலாம்." என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசால முண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்." (சங்கீதம் 4:1) தாவீது தப்பியோடின காரியம் -பல வழிகளில் மனுக்குலத்திற்கு மாதிரியாக அமைந்துள்ளது. அநேக முறைகள் தாவீதின் பாவம் அவரை மேற்கொண்டது. அதை உணர்ந்துக்கொள்ளும்போதெல்லாம் அவர் தேவனிடம் திரும்பினார். இந்த உலகத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் அடிக்கடி நடந்துக்கொண்டிருப்பதை நாம் காணலாம். தொடர்ந்து பாவங்கள் செய்யப்பட்டு, தவறுகள் நடைபெற்றுவருகிறது. மனிதனுடைய ஆழமான இருதயம் சமாதானத்தை ஏங்கினாலும் - ஐயோ, பரிதாபம் பாவம் மேற்கொண்டுவிடுகிறது.

இரக்கம் என்ற வார்த்தைக்கு பதிலாக அன்பான கனிவு அல்லது கிருபை என்ற வார்த்தையே புதிய மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரக்கம் என்ற வார்த்தையைக் காட்டிலும் இன்னும் ஆழமான அர்த்தத்தை இந்த வார்த்தைகள் கொடுக்கிறது. காலப்போக்கில் இந்த வார்த்தைகள், குறிப்பிடவேண்டிய பொருளைக் காட்டிலும் சற்று வேறுபட்ட பொருளை தந்தது. எடுத்துக்காட்டாக புதிய மொழிபெயர்ப்புகளை பழைய வேதாகமத்தில் குறிப்பிடப்பட்ட பெயர்கள் காணப்படுவதில்லை. சோதோம் மற்றும் கொமாரா என்ற இரண்டு பட்டணங்களுக்கு பதிலாக - பாபெத் -திரா மற்றும் நியுமிரியா என்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதாகமத்தில் பிரிக்கமுடியாத இரண்டு வார்த்தைகள் உண்டு - மன்னிப்பு மற்றும் இரக்கம். இவைகள் அன்பு என்னும் வார்த்தையினால் மூடப்பட்டுள்ளது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." ( யோவான் 3:16 ) என்று இயேசு சொன்னார். தேவன் மனுகுலத்தின்மேல் வைத்த இரக்கத்தினால் ஆதாமின் மீறுதல்களை மன்னிக்கவும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீட்கவும் தன்னுடைய ஒரே பேரான குமாரனை ஈடுபலியாகக் கொடுத்தார். மன்னிக்கக்கூடிய இந்த கோட்பாட்டைக் குறித்து இயேசு பேதுருவுக்கு ஏழு எழுபது முறை மன்னிக்கவேண்டுமென்று கற்பித்தார். (மத்தேயு 18:22)

" தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்." (சங்கீதம் 51:1) என்று தாவீது எழுதினார். தேவன் தமக்குள் கொண்டிருந்த இரக்கத்தினால் தாவீதினுடைய விண்ணப்பத்திற்கு பதிலளிப்பேன் என்றும், அவருடைய மீறுதல்களை மன்னிப்பேன் என்றும் வாக்களித்தார். தாவீதிற்கு மட்டுமல்ல தெய்வீக இரக்கத்தை மீண்டும் பெற்று தம்முடைய குமாரர்களாகும் வாய்ப்பை பெறக்கூடிய இஸ்ரயேலுக்கும், மனித இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தேவன் வாக்களித்திருக்கிறார்.

**இரக்கம் என்பதன் பொருள்**

இரக்கம் என்ற வார்த்தைக்குள் அநேக காரியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1. ஒருவரின் ஆதிக்கத்தில் மற்றொருவர் இருக்கும் பட்சத்தில், அவரை துன்புறுத்தாமல், தண்டிக்காமல் இருப்பது.
2. நியாமாக கிடைக்கவேண்டிய பரிவையும், கருணையையும் காட்டிலும் அதிகமாக செலுத்துவது.
3. சகிப்புத்தன்மையும், கனிவும் (பாசம்)
4. குற்றங்களை மறந்து மன்னிக்கும் மனப்பக்குவம்.

" தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கிவிடுவிக்கவும்;பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர். அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால், நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூரும். கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக." (சங்கீதம் 33:18-22) என்று தாவீது எழுதுகிறார்.

## அனைவருக்கும் வாக்களிக்கப்பட்ட தேவனுடைய கிருபை

வெகுசீக்கிரத்தில் எல்லா தீமையும் இந்த பூமியிலிருந்து வேரோடு பிடுங்கப்படும். அப்பொழுது சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய ஜனங்களுக்காக எழுந்து நிற்பார். "கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர்பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும். தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்குத் தயைசெய்யுங்காலமும், அதற்காகக் குறித்தநேரமும் வந்தது." (சங்கீதம் 102 :12,13) என்ற தேவனுடைய வார்த்தைகள் அப்போது நிறைவடைவதை நாம் காணலாம். இங்கு இஸ்ரயேலின்மேல் தேவன் கொண்டிருந்த நீடிய பொறுமையைக் காணலாம்.

இன்று மனிதனை துன்புறுத்தும் எல்லா விதமான பிரச்சனைகளையும், சோதனைகளையும், துன்பங்களையும் அனுமதிக்கப்படுவதன் காரணம் என்ன ? என்று எல்லோரும் தொடர்ந்து பேசிகொண்டிருப்பதைக் கேட்கிறோம். ஆயினும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் நம்முடைய பரலோகத் தந்தையின் இரக்கம் வெளிப்படுவதை நாம் காணலாம். 2010 ஜனவரியில் ஹைட்டியின் ஜனங்கள், பூமி அதிர்ச்சியினால் கடும் வேதனைப்பட்ட காரியங்கள், நம்முடைய இருதயத்தை பிளக்கிறது. ஆயினும் "அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். " (சங்கீதம் 30:5) என்று நாம் அறிந்திருக்கிறோம். உலகத்தில், முழுமையான சந்தோஷத்தின் ஆரவாரங்கள் கேட்கக்கூடிய, மகிழ்ச்சியின் காலைக்கு தேவனுடைய ஜனங்களை ஒருமித்து ஆயத்தப்படுத்துவதுவதற்கும், அதைக் குறித்து கற்பிப்பதற்கும், இப்படிப்பட்ட பேராபத்துகளை தேவனுடைய ஞானம், பயன்படுத்தியது." அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." (வெளிப்படுத்தல் 21:4) இப்படிப்பட்ட பேராபத்துக்களையும் தேவன் அவருடைய இராஜ்யத்தில் முடிவுக்குக்கொண்டுவருவார் என்று யோவான் தேவனுடைய இரக்கங்களைப் பற்றி குறிப்பிடுகிறார்.

## மனுக்குலத்தின் இரட்சகரின் மூலம் வரக்கூடிய இரக்கம்

ஆதாமின் பாவம் தங்கள்மேல் விழுந்ததின் பாதிப்புகளை உலகத்தில் அநேகர் உணருவதில்லை. சர்வ வல்லவரோடு இருந்த நெருங்கிய உறவை ஆதாமின் கீழ்படியாமை பரித்தது. ஆகவே ஏதேனில் செய்யப்பட்ட பாவத்தை அவருடைய சந்ததி வழிவழியாக சுமந்து வருகிறது. ஆயினும் "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்." (ஆதியாகமம் 3:15) என்று தேவன் சர்ப்பத்திடம் வாக்களித்தபோது தேவனுடைய இரக்கம் விவரிக்கப்படுவதை காண்கிறோம்.

இரட்சகரின் வருகையையும், இறுதியில் அவர் சாத்தானை அழித்து மனுக்குலத்தை மீண்டுமாக பிதாவோடு ஒப்புரவாக்கி, ஆதாம் ஏதேனில் அனுபவித்த சந்தோஷத்தை திரும்ப கொடுப்பதின் ஒரு தெளிவற்ற விளக்கத்தை இது குறிப்பிடுகிறது. ஒரு வேளை வேதாகமத்தை பொறுத்த வரையில் மனுகுலத்தின் மேல் காட்டப்படும் இரக்கத்திற்கு, இதுவே சிறந்த மாதிரியாக இருக்கவேண்டும்! பிள்ளைகளுக்கு இரக்கத்தை மறுக்கும் பெற்றோருண்டோ ? " உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்தேயு 7:9-11)

ஜலப் பிரளயத்திற்குப் பின் மனித வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் நாளுக்கு நாள் குறையத் துவங்கியது. தந்தையாம் ஆதாமிடமிருந்து வெகு தூரத்தில் சென்ற மனுக்குலம், அநேக வியாதிகளாலும், பிரச்சனைகளாலும் வாதிக்கப்பட்டார்கள். பரிபூரண ஆதாம் அனுபவித்த குறுகிய கால மகிழ்ச்சியிலிருந்து மனுகுலம் நாளுக்கு நாள் வெகு தூரம் சென்று கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆதாம் பாவம் செய்தபின், மனித நிலையைப் பார்க்கும்போது தேவனுடைய இரக்கம் அதிகமதிகமாய் வெளிப்பட்டதை வெகுசிலரால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடிந்தது. மனுஷன் வேதனைகளோடும், வியாதியின் உபத்திரவங்களோடும்

அதாவது இருதய நோய், மற்றும் கேன்சர் போன்ற வியாதிகளோடு பல நூற்றாண்டுகளாக ஜீவித்துகொண்டிருப்பதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. ஒவ்வொருவரும் பல ஆயிர வருடங்கள் வியாதியின் கொடுமைகளை அனுபவிப்பதை நினைத்துப் பாருங்கள் !

அனைவரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். (1தீமோத்தேயு 2 :3,4)

ஆகையால் பல சந்தர்ப்பங்களில் இந்த மனுக்குலத்திற்கு தேவனுடைய இரக்கம் கொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக நீண்ட காலம் சிறையிருப்பில் அகப்பட்டிருந்தாலும், உதவிகளைப் பெறுவதற்கு தேவனிடம் மனந்திரும்பும் போது, அவர் அருகில் இருப்பார் ! " அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்." (ஏசாயா 42:3)

நம்முடைய பரலோக பிதா தாம் சிருஷ்டித்த மனுகுலத்தை மிகவும் நேசிக்கிறார். இதை யோவான் தெளிவாக விவரிக்கிறார். " அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (யோவான் 3:16, 17)

செயலாற்றப்பட்ட தேவனுடைய இரக்கங்களில் இதுவே மிக உயர்ந்தது !

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் பாவங்களை தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சென்று அவருடைய தெய்வீக இரக்கத்தைப் பெற்று மன்னிப்பைப் பெறுவதற்கு வழிவகுக்கிறது. நாம் மண் என்பதை பரலோகப் பிதா அறிந்திருக்கிறார். சில நேரங்களில் நாம் மிகப்பெரிய தவறுகளைச் செய்தாலும் உண்மையான மனந்திரும்புதலோடும், நொறுக்கப்பட்ட இருதயத்தோடும், இனி நம்முடைய வாழ்க்கை பாதையை மாற்றிக் கொள்ளுவோம் என்ற நோக்கத்தோடும், நாம் பிதாவிடத்தில் வரும் போது நிச்சயமாக நாம் மன்னிக்கப்படுகிறோம் !

## தாவீதின் வாழ்க்கையில் தேவனுடைய இரக்கம்

பல குற்றங்களைத் தொடர்ந்து செய்த ஒரு மனிதனாக தாவீது இருந்தும், தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தோம் என்ற குற்றமுள்ள மனதோடு தேவனிடம் திரும்பியபோது அவர் மன்னிக்கப்பட்டார். அநேகராகிய நாம், நம்மை தாவீதோடு ஒப்பிடலாம். மேலும் அவருடைய பாவங்கள் மற்றும் அதை திருத்திக் கொள்வதற்காக அவர் எடுத்த முயற்சிகளிலிருந்து நாம் அநேகப் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். 11சாமுயேல் 12-ம் அதிகாரத்தில் ஐசுவரியமுள்ள ஒரு மனிதனைப் பற்றியும் ஏழையான ஒரு மனிதனைப் பற்றியும் தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதிடம் சொன்னார். அந்த எளியவன் ஒரு ஆட்டுக் குட்டியை தன் பிள்ளையை போல வளர்த்து வந்தான் என்று கூறினார் இதைக் குறித்த காரியங்களை 4-ம் வசனத்தில் நாம் வாசித்து அறியலாம். "அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில்வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக் குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில்வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான். அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபம் மூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்துக்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும் என்றான்.அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்" என்றார்.

இவ்வளவு காரியங்கள் நடந்த பின்னும், இஸ்ரயேல் தேசத்தின் மேல் தாவீதை இராஜாவாக நியமித்து, அவருடைய ஜீவனை மீட்டு, வாழ்க்கையில் உள்ள சந்தோஷங்களை தாவீதுக்குக் கொடுத்ததின் மூலம், தேவன் தாவீதின் மேல் வைத்திருந்த இரக்கமும் கிருபையையும் வெளிப்பட்டது. ஆயினும் இவ்வளவு கிருபைகளைப் பெற்ற தாவீது தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தார். இப்படியாக நம்முடைய பரலோகத் தந்தை நமக்குக் கையளித்த சகல நன்மைகளையும் மறந்து எத்தனை முறை தவறுசெய்திருப்போம் ?

## பழைய ஏற்பாட்டு நீதிமான்களுக்க தேவன் காட்டிய இரக்கம்

விசுவாச ஓட்டத்தில் நமக்குமுன் சென்று, ஜெயித்த சிலைரை அப்போஸ்தலர் வரிசைபடுத்துகிறார் - "பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்," (எபிரெயர் 11:32,33) 1கொரிந்தியர் 10:6ல் இவர்களின் வாழ்க்கை நமக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று பவுல் எழுதுகிறார். இவ்வளவு காரியங்களும் தேவனுடைய கிருபையினால் நடந்தது.

திரள் கூட்டத்தாரும் தேவனுடைய இரக்கத்தைப் பெறுவார்கள். "அப்பொழுது, மூப்பர்களில்

ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்." (வெளிப்படுத்தல் 7:13,14) இவர்கள் தேவனிடமிருந்து கிருபையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வகுப்பாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆவியை, உபத்திரவத்தின் அக்கினியினால் காத்துக்கொள்ள தேவன் அனுமதிக்கிறார்.

## மனுகுலத்திற்கு வாக்களிக்கப்பட்ட தேவனுடைய இரக்கம்

வெகு சீக்கிரத்தில் சபை நிறைவடைந்துவிடும், மனுக்குலம், தேவனுடைய கிருபையை பெறுவதற்கு காலம் நெருங்கிவிட்டது. வரக்கூடிய உலகளவிலான இந்த ஆசீர்வாதத்தைக் குறித்து ஏசாயா மிக அழகாக சித்தரிக்கிறார் - "வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்." (ஏசாயா 35 :1,2)

இது இஸ்ரயேலை மட்டும் அல்ல, தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை இந்த உலகத்தின் மேல் பொழிந்து அவருடைய இரக்கத்தை வெளிப்படுத்தும்போது முழு ஜனங்களும் களிக்கூறுவார்கள். இப்படிப்பட்ட தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்பட - கிறிஸ்துவும், சபையும் மட்டுமே காரணராக இருப்பார்கள்.

5ம் வசனத்தைத் தொடர்ந்து வாசிக்கையில் - "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்." இது மாம்சத்திற்குரிய சுகத்தை மட்டுமல்ல, ஆவிக்குரிய சுகத்தைப் பற்றியும் விவரிக்கிறது. இந்த மனுகுலம் முதல் முறையாக பரலோகப் பிதாவால் கொடுக்கப்பட்ட பிரமாணங்களைத் தெளிவாகக் காண்பார்கள். வசனம் -8 "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை." பெரும் பாதையைக் குறித்து மற்றொரு விவரத்தை ஏசாயா குறிப்பிடுகிறார். "இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் அவர்களுக்கு இருந்ததுபோல, அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும்." (ஏசாயா 11:16)

வரக்கூடிய இராஜ்ஜியத்தில் இந்த மனுகுலம், தேவனிடம் செல்வதற்கு எதுவும் தடை செய்யமுடியாது. ஆகவே "அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்." (ஏசாயா 35:9,10) என்று வருங்காலத்தைக் குறித்து ஏசாயா கூறுகிறார்.


ஆண்டவரின் ஈடுபலியினால் மீட்கப்பட்டவனுக்கும், நம்முடைய பரலோகத் தந்தையின் இரக்கத்தைக் கற்று, அதில் மகிழ்வதற்கு, கல்லறைகளிலிருந்து எழுப்பப்படுவார்கள். ஆயிர வருட ஆட்சியின் முடிவில் இறுதி சோதனை நடைபெற்று -" மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது." (வெளிப்படுத்தல் 21:3,4) என்ற வசனங்கள் நிறைவடையும். இதுவே, தேவனுடைய இரக்கத்தின் முழுமையான காட்சியாகும் !

## நம்மிடத்தில் தேவனுடைய இரக்கம் எவ்வாறு செயல்பட வேண்டும்

பசியால் வாடும் சிறு குழந்தையைப் பார்த்த நாம் கலங்காமல் இருப்போமா ? அல்லது பூமியதிர்ச்சியில் தன்னுடைய முழு குடும்பத்தை இழந்த பிள்ளையைக் கண்டு மனதுருகாமல் இருப்போமா ? சுவிசேஷ யுகம் முடியும் வரைக்கும், மனுகுலம் அனுபவிக்கும் பாடுகளை காணும், நம்முடைய பரலோக பிதாவின் எண்ணங்களைக் குறித்து நாம் எவ்வாறு சிந்திப்பது ? மார்த்தாள் மற்றும் மரியாளோடு லாசருவின் கல்லறைக்கு முன்னின்ற இயேசு மிக துக்கத்தோடு அழுதார். (யோவான் 11:35) இப்படியிருக்க, சர்வத்தையும் சிருஷ்டித்த சிருஷ்டிகர், தன்னுடைய மனித குடும்பத்திற்காக எவ்வளவு வருத்தப்பட்டு கொண்டிருப்பார் ?

பெத்தானியாவில் மார்த்தாள், மரியாளிடம் இயேசு காண்பித்த இரக்கத்தை நாம் நம் இருதயங்களில் கொண்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட இரக்கம் நமக்குள் இராவிட்டால் பரலோக ஏற்பாட்டில் நமக்கு எந்தவிதமான பங்கும் இராது.

இரக்கம் தேவனுடைய குணலட்சணமும், சகல பரிசுத்தவான்களின் கிரியையுமாயிருக்கிறது. அன்பும், கருணையும் இதை வெளிப்புறமாக வெளிப்படுத்துகிறது. இரக்கம் தேவனுடைய பிரதிபலிப்பு !



# இயேசு, இரக்கத்தின் ஒரு மாதிரி

அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான் -மாற்கு 10:47

**Robert Brand**

ஒருவரின் ஆதிக்கத்தின் கீழ் சிலர் அகப்படும்போது, வல்லமை பெற்றவர் தங்களுக்கு கீழ் இருப்பவர்களிடம் செயலாற்றும் அன்பான கிரியைளும், இரக்கத்தின் பொருளாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஆவிக்குரிய காரியங்களிலும், அறிவு பூர்வமான காரியங்களிலும் உடல் ரீதியான நிலையிலும் தான் சந்தித்த அனைவரைக் காட்டிலும் இயேசு மேன்மையுள்ளவராய் இருந்தார். நம்முடைய இரட்சகரின் அனுதின வாழ்க்கையில் இந்த குணம் மிக அதிக அளவில் செயலாற்றியதை நாம் மிக எளிதாகக் காணமுடிகிறது. அபூரணமான மனிதர்களிடம் இயேசு தன் வாழ்நாள் முழுவதும், பாசத்தையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தினார். ஏனெனில் மனிதன் பாவத்தில் விழுந்து, மரண தீர்ப்பை அடைந்தான் என்பதை இயேசு மாம்சத்தில் பிறக்கும் முன்னே கண்டிருந்தார். ஆகவே "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்," (யோவான் 2:25) என்று யோவான் ஆண்டவரைக் குறித்து கூறினார். இயேசு இந்த உலகத்தில் பணியாற்றும்போது, மனுக்குலத்திற்கு வரக்கூடிய ஆசீர்வாதங்களைப் பற்றி அறிந்திருந்தார். இந்த உண்மையை அவருடைய நெருங்கிய சீஷர்களும் புரிந்துக்கொள்ளவில்லை. பரலோக தந்தையின் திட்டத்தில் உள்ள மிக அற்புதமான காட்சியின் அறிவை அவர் பெற்றிருந்ததினால், மற்றவர்களோடு அவர் தொடர்பு கொண்ட எல்லா விதங்களிலும், தனித்துவமான முறையில் செயல்பட்டார்.

## இயேசுவின் அற்புதங்களுக்கு மூன்று காரணங்கள்

அநேக அற்புதங்களை நடப்பித்து, வியாதியஸ்தர்களை குணமாக்குவதே, இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் முக்கிய பங்கைப் பெற்றது. இந்த அற்புதங்கள் நடைபெற்றதற்கு அடிப்படையாக, குறைந்தபட்சம் மூன்று காரணங்கள் உள்ளது. இந்த உலகத்தில் மேசியாவின் வருகை ஸ்தாபிக்கப்படுவதே முதலாம் காரணமாக இருந்தது. " வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்." (மத்தேயு 11:3) என்று கேட்கும்படி யோவான் ஸ்நானகன் தன்னுடைய சீஷர்களை இயேசுவிடம் அனுப்பினார். ஆம் அல்லது இல்லை என்று பதிலளிப்பதற்கு மாறாக இயேசு செய்த அற்புதங்களின் சாட்சியை ஒரு வல்லமையான பதிலாக அனுப்பினார். இனிவரக்கூடிய இராஜ்யத்தில் தம்முடைய கிரியைகளுக்கு நிழலாக, இயேசு அற்புதங்களை செய்தார் என்பது இரண்டாவது காரணமாக இருக்கிறது. "இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார்.

அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று

அறிந்திருக்கிறேன் என்றான். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமா யிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:23)

இறுதியாக, இரக்கத்தின் காரணமாகவே நம்முடைய ஆண்டவர் இந்த அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஏனெனில், இந்த இரக்கத்தினாலே, நம்முடைய ஆண்டவர் உடனடியாக ஒவ்வொரு அற்புதங்களையும் செய்தார் என்று வசனங்களில் நாம் காணலாம். எடுத்துக்காட்டாக "இயேசு மனதுருகி, அவர்கள் (இரண்டு குருடரை) கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்.(மத்தேயு 20:34) "நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடிய..." (எபிரெயர் 4:15) இயேசுவை நாம் பெற்றிருக்கிறோம் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது ! முதலில், இந்த மனுக்குலத்தின் அபூரணமான நிலையைக் கண்டு இயேசு கலங்கினார் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆகவே அவர் தாம் பெற்ற வல்லமையினால் நோயுற்றோரை குணப்படுத்தினார். இதற்காகவே தாம் பெற்ற, வல்லமையை தாராளமாகச் செலவளித்தார்.

## ஒரு கானானிய ஸ்திரி

நம்முடைய ஆண்டவர் சந்தித்த விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளிடம் ஒரே விதமாக இரக்கம் காட்டினார். ஒருமுறை ஒரு கானானிய ஸ்திரீ இயேசுவிடம் வந்தபோது தன்னுடைய மகளை குணப்படுத்தும்படி வேண்டிக் கொண்டாள். நம்முடைய ஆண்டவர் அவளை கவனியாத போதிலும், சீஷர்கள் அவளை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். "நான் காணாமல் போன ஆடாகிய இஸ்ரயேல் வீட்டாருக்காக மட்டுமே அனுப்பப்பட்டேன்" என்று இயேசு அதற்கான காரணத்தை கற்பித்தார். ஏனெனில், யூத ஜாதி மட்டுமே தேவனால் தேர்வு செய்யப்பட்டு, நியாபிரமாணத்தின் உடன்படிக்கையின் மூலம் தேவனோடு நல்லுறவு கொண்டிருந்தார்கள். ஆகவே நம்முடைய ஆண்டவரின் ஊழியம் புறஜாதிகளை அல்ல, இஸ்ரயேல் ஜாதியை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தது. இந்த ஸ்திரீ ஒரு புறஜாதியாக இருந்த காரணத்தினால் இயேசு இவளுக்கு பொறுப்பாக பதிலளிக்கவில்லை. இருப்பினும், "எனக்கு இரங்கும்,

எனக்கு இரங்கும்" என்று அவள் மீண்டும் கெஞ்சினாள். "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய் குட்டிகளுக்கு போடுவது நல்லதல்லவே" என்று இயேசு சொல்லி தன்னுடைய நிலையைப் புரியவைத்தார். (நாய் குட்டிகள் வீட்டில் வளர்க்கப்படும் செல்ல பிராணியைப் பற்றி சொல்லப்படுகிறது) அந்த ஸ்திரீ இயேசு சொன்ன வார்த்தைகளை ஒத்துக்கொண்டு "மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை நாய்குட்டிகள் தின்னுமே" என்று தொடர்ந்து சொல்லி அவரின் ஆழமான பொறுப்பை உணர்த்தி, அவரை மீண்டும் கெஞ்சினாள். எப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கை, அந்த ஸ்திரீ இயேசுவை எதிர்க்கவில்லை, அவரோடு வாதாடினாள். அதனிமித்தம் இயேசு அவளை மெச்சிக்கொண்டு - " ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்." ( மத்தேயு 15:22-28)

ஆகவே இந்த சுகமளிப்பு, இரக்கத்தின் வெளிப்பாடாக இருந்தது. இந்த அந்நியருக்கு எவ்விதத்திலும் இயேசு கடமைப்பட்டவர் அல்ல. ஆயினும், அவளுடைய தாழ்மையும், விடாமுயற்சியுள்ள விசுவாசமும் அவருடைய கவனத்தை ஈர்த்தது. அதற்குபின் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தார். நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட அநேக சந்தர்பங்களில் நாம் உதவிசெய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அந்நேரங்களில் நம்முடைய ஆண்டவரைப் போல மற்றவர்களிடம் இரக்கம் காட்டுவதற்கான வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மற்றவர்களின் சூழ்நிலைகளை அறிந்து, அவர்களுக்காக நம்முடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதும் இரக்கமாகும்.

## இயேசு, யாவீரு மற்றும் வியாதியுள்ள ஸ்திரி

இயேசுவின் இரக்கத்திற்கு மற்றொரு மாதிரி - ஒரு ஸ்திரீ தன்னுடைய குழந்தைக்காக அல்ல தனக்காக வேண்டிக்கொண்டாள். யவீரு, "ஜெப ஆலயத் தலைவன்" மரித்துகொண்டிருக்கும் தன் மகளுக்காக மிக வேதனையோடு இயேவினிடத்தில் வந்தார். அவருடைய மகளைப் பார்க்கச் செல்வதற்குமுன், பன்னிரண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீயின் விண்ணப்பத்திற்கு இயேசு பதிலளித்தார். அவள் தன்னுடைய வாழ்நாட்களில் சம்பாதித்த முழுவதையும் வைத்தியத்திற்காக செலவழித்தாள். அவள் கொண்டிருந்த விசுவாசத்தினால் இயேசுவின் வஸ்திர தொங்கலைத் தொட்டவுடன் சொஸ்தமானாள். "யார் என்னைத் தொட்டது ?" என்று இயேசு கேட்டு அவளைக் குறித்து அறிந்தபோது - மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ...
(லூக்கா 8:40-48) என்றார். அதற்குபின் இயேசு யவீருவின் துரிதமான விண்ணப்பதற்குச் செவி சாய்த்தார்.

யவீருவின் மகளை அற்புதமாக சொஸ்தப்படுத்தின காரியம் மட்டுமே அவருடைய இரக்கத்தை செயலாற்றாமல், இடையில் வந்த ஸ்திரீயினிடத்திலும் அவருடைய இரக்கம் வெளிப்பட்டது. நான் அவசரமாக ஒரு வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறேன் என்று அந்த ஸ்திரீயிடம் சொல்லி அவளை காத்திருக்க வைத்திருக்கலாம். ஆனால் இயேசு அப்படிச் செய்யவில்லை. அவர் மிகுந்த இரக்கமும் கிருபையும், உள்ளவராக இருந்தபடியால் அவருடைய உதவியை எதிர்பார்க்கும் ஒருவரையும் அவர் காக்க வைக்கிறதில்லை. விசேஷமாக அவர் மேல் விசுவாசம் உள்ளவர்களுக்கு உடனடியாக உதவி செய்கிறார். நம்முடைய அப்போஸ்தலனுடைய எச்சரிப்பின்படி -நமக்கு வசதியில்லாதபோதிலும், சூழ்நிலைகள் சாதமாக இல்லாதபோதிலும், காலத்திற்கு ஏற்றபடி மற்றவர்களுக்கு உதவி செய்யும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு." (11தீமோத்தேயு 4:2)

## பத்து குஷ்டரோகிகள்

நம்முடைய ஆண்டவர் பத்து குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார். (லூக்கா 17 :11-19) இயேசு எருசலேமுக்குச் செல்கையில் தூரத்தில் நின்ற பத்து குஷ்டரோகிகளும், "இயேசு எங்கள் மேல் இரக்கமாயிரும் " என்று சைகை காட்டி அழைத்தார்கள். லேவியராகமம் 13 மற்றும் 14 -ம் அதிகாரங்களின்படி ஆசாரியர்களிடம் தங்களைக் காண்பிக்கும்படி அவர்களை அனுப்பினார். அவர் சொன்னபடி அவர்கள் நடந்துச் செல்கையில் அற்புதமாக குணமடைந்தார்கள். குணமடைந்த அந்த குஷ்டரோகிகளில் சமாரியனாக இருந்த ஒருவன் இயேசுவுக்கு நன்றி சொல்லும்படி அவரிடம் வந்தான்.

"நீங்கள் பத்து பேர் அல்லவா ? மற்ற ஒன்பது பேர் எங்கே ?" என்று நம்முடைய ஆண்டவர் கேட்டார். அவருடைய இரக்கமுள்ள ஏற்பாட்டின் ஒரு முக்கிய ஆதாரமாக இந்த கேள்விகள் பிரதிபலித்தது. இது கடுமையான குற்றச்சாட்டாக இராவிட்டாலும், ஆதங்கமுள்ள ஒரு கேள்வியாக இருந்தது. சொஸ்தமடைந்த ஒன்பது பேரும் இயேசுவுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருந்தும் அவர்கள் அதை செய்யவில்லை. இதை முன்னறிந்த ஆண்டவரும் அவர்களுக்குக் காட்டின இரக்கத்தைக் குறைக்கவில்லை. இப்படிப்பட்ட குணமுடையவர்களுக்கு உதவி செய்யும்போது நாமும் கிறிஸ்துவைப்போல நடந்துக்கொள்ளவேண்டும். நாம் செய்யக்கூடிய நன்மைகளுக்கு எந்தவிதமான பிரதிபலனும் வராவிட்டாலும் - நம்முடைய முயற்சிகளினால் அவர்களின் முன்னிலமையைக் காட்டிலும் பின்னிலமை நன்மையாக இருப்பதை எண்ணி சந்தோஷமடையலாம். அவர்களின் இந்த குணத்தை எண்ணி அவர்கள் மேல் பரிதாபப்படலாம்.

## இயேசு மற்றும் பேதுரு

இயேசுவின் இரக்கம் வல்லமையாக செயல்பட்டதற்கான மற்றும் சில எடுத்துக்காட்டுகள் உண்டு. விசேஷமாக

தீவிரமாக செயல்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் நம்முடைய ஆண்டவர் நடந்துக்கொண்ட விதங்களை நாம் அறிவோம். "பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றார்." (மத்தேயு 26:33) என்று தைரியமாக பேதுரு அறிவித்திருந்தும், அவர் இயேசுவை மூன்று முறை மறுதலித்தார் என்று வேதம் வாசித்த அனைவரும் நன்கு அறிந்திருக்கிறார்கள். மேலும், அடுத்த வசனத்தில் தீர்க்கதரிசனமான ஒரு வாக்கியத்திற்கு இயேசு பதிலளித்தார். (மத்தேயு 26 :34) இதன் நிறைவேறுதலை மத்தேயு பதிவு செய்திருக்கிறார். "அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்." (மத்தேயு 26:75)

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு பேதுருவை சந்தித்த போது, "என்னை நேசிக்கிறாயா?" என்று மூன்ற முறை கேட்டார். அடுத்து, "என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயா?" என்ற கேள்விகளோடு அந்த சம்பாஷனையை முடித்தார். (யோவான் 21:15-17) பேதுரு மூன்று முறை மறுதலித்தபின் இயேசு மூன்று முறை கேள்வியைக் கேட்டதின் காரணம் நமக்கு தெளிவாகத் தெரிகிறது. அதாவது பேதுருவை இயேசு முழுமையாக மன்னித்தார் என்பதற்கு இதுவே ஆதாரம். கிறிஸ்துவின் மிகுந்த இரக்கம், கனிவு, பரிவுக்கும் இந்த சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. அதற்குபின் ஆதி கிறிஸ்தவ சபையில் விசுவாசமுள்ள மூப்பராக பேதுரு செயல்பட்டார்.

இயேசு பேதுருவிடம் காண்பித்த இரக்கத்தை மற்றொரு சம்பவத்திலும் காணலாம். கல்லறையை சுற்றியிருந்த ஸ்திரீகளுக்கு ஆண்டவரின் உயிர்த்தெழுதலை, ஒரு தூதன் அறிவித்தபோது -" நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் **பேதுருவினிடத்திற்கும் போய்;** உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் " (மாற்கு 16 :7) என்று கூறினார்.

நம்மைப்போல் பேதுருவும் மனித பலவீனங்களுக்கு உட்பட்டவராக இருந்தார். ஆவிக்குரிய வகையில் எவ்வளவு வல்லமையாக இருந்தாலும் சில மனித பலவீனங்களுக்கு நாம் தப்பித்துக் கொள்ளவே முடியாது. நம்முடைய ஆண்டவரின் இரக்கத்தினால் நம்முடைய குறைகள் நித்தமும் மன்னிக்கப்பட்டு, மீண்டும் மீண்டுமாக அவரை சேவிப்பதற்கு இப்படிப்பட்ட வாய்ப்புகளைப் பெற்றிருப்பதற்கு நாம் மேலும் நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும். இப்படியாக நித்தமும் நம்மை ஏமாற்றுகிறவர்களிடத்தில் நாமும் இயேசுவைப்போல் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## இயேசு நமக்கு கற்பித்த கட்டளைகள்

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." (மத்தேயு 5:7) என்று மலைப்பிரசங்கத்தில் வாசிக்கிறோம். மன்னிப்பை குறித்து ஆண்டவரின் கட்டளை - இந்த வசனத்திற்கு ஒத்திருக்கிறது. அதற்குப்பின் நாம் மன்னிப்பைப் பெறுவதற்கு இதே கோட்பாட்டை நமக்கு பிரமாணமாக கற்பித்திருக்கிறார். "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்தேயு 6:14) நாம் மற்றவர்களிடம் இரக்கம் காட்டினால் நமக்கு இரக்கம் காண்பிக்கப்படும். இந்த ஒரு கோட்பாட்டை நமக்குள் வளர்க்கும்போது, நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு எளிதில் மாறலாம். இப்படிப்பட்ட நம்முடைய முயற்சி மூன்று மடங்கான ஆசீரை நமக்கு பெற்றுத்தரும். வெகு சீக்கீரத்தில் நாம் நம்முடைய ஆண்டவரைபோல் மாறலாம். நம் வாழ்க்கையில் சந்திக்கும் அனைவருக்கும் நன்மை ஏற்படலாம், தனிப்பட்ட முறையில் தேவனிடத்தில் கூடுதலாக இரக்கம் பெறலாம்.

இரக்கம் ஒரு அற்புதமான நற்பண்பு. நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் ஊழிய வாழ்க்கையில் இந்த சிறப்பான குணம் தொடர்ந்து செயல்படுவதை நாம் துல்லியமாகக் காணலாம். இவருடைய மாதிரியை நம்முடைய இருதயத்திற்கு எடுத்துச் சென்ற "இரக்கம்" என்ற சிறப்பான குணத்தை நமக்குள் வளர்வதற்கு சோர்ந்துபோகாமல் முயற்சிப்போம்.

நாம் இரக்கத்தை எவ்வாறு செயலாற்றுவது?



# இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் ரக்கமுள்ளவர்களாயிருங்கள (லூக்கா 6:36)

அன்பையும், மன்னிப்பையும் கொடுக்கக்கூடிய மனநிலையைக் கொண்டு, பாசமாக செயல்படுவதை இரக்கத்திற்கு பொருளாகக் கூறலாம். நாம் பெற்ற அனைத்து வசனங்களும், இப்படிப்பட்ட குணத்தை ஆழமாக உணர்ந்து, அதிகமாக வளர்த்துக்கொள்ள நமக்கு போதிக்கிறது. நாம் பயிற்சி பெற வேண்டுமென்று இயேசு சொன்ன இந்த சிறப்பான குணம் தேவனுடையது.

அனைவரிடமும் இரக்கமாய் இருக்க வேண்டுமென்று வேதம் கற்பிக்கிறது. சகோதரர்கள், குடும்பம் மற்றும் உலகத்திலுள்ள அனைவரும் இதில் அடங்குவர். பொதுவாக கிறிஸ்தவர்கள், மற்ற கிறிஸ்தவர்களிடம் இரக்கமாய் இருக்கவேண்டுமென்ற காரணத்தை புதிய ஏற்பாடு கூறுகிறது. ஏனெனில், ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்புகளுடன் வாழ்கிறோம். ஆகவே நம்முடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பட்சத்தில், அதிகமான இரக்கம் செயலாற்றப்படவேண்டும்.

## இரக்கம் பெறுவதற்கு இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்

இங்கு கிருபையோடு தொடர்பு கொண்டிருக்கும் இரக்கத்திற்கு மற்றொரு விளக்கத்தைக் காணலாம். நமக்கு தகுதியற்ற காரியங்களைப் பெறுவது கிருபை என்று சொல்லப்படுகையில், நாம் தகுதியோடு பெறக்கூடியது இரக்கம் என்று நாம் புரிந்துகொள்ளக் கூடாது. நம்முடைய அநீதிக்கு தக்கதாக சரிகட்டுதலும், பாவங்களுக்கு தக்கதாக தண்டனையையும், தேவன் நமக்கு கொடுப்பதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 103:10) தேவன் நம்மிடம் காட்டும் கிருபை மற்றும் இரக்கத்திற்கு நாம் எவ்வளவு நன்றி உள்ளவர்களாய் இருக்கிறோமோ அந்த அளவுக்கு பிறரிடத்தில் நாம் இரக்கம் காட்டவேண்டும். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய இரக்கத்தைப் பெறுவார்கள் என்று இயேசு கூறினார். (மத்தேயு 5:7)

ஆனால் - "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." (மத்தேயு 7:1,2) என்று மேற்கூறப்பட்ட வசனத்தின் விரிவாக்கப்பட்ட ஆழமான விளக்கத்தைப் புரிந்துக்கொள்ளவதற்கு நாம் தவறிவிடக்கூடாது. இது குறைவற்ற ஒரு செய்தியாகும். நாம் இரக்கத்தின் ஆவியிலும், மற்றவர்களை மன்னிக்கக்கூடிய தேவ ஆவியிலும் வளர்ச்சியடையாவிட்டால் நாம் என்றுமே மன்னிப்பைப் பெறமுடியாது. "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" (மாற்கு 11:25-26) என்று மேலும் இயேசு சொல்லிய கருத்தை வலியுறுத்துகிறார்.

## இரக்கம் பாராட்டுவது மிகக் கடினமாக இருப்பத காரணம் என்ன?

இவ்வளவு தெளிவாக வசனங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அநேக கிறிஸ்தவர்கள் இரக்கம் பாராட்டுவதற்கு மிகவும் கஷ்டப்படுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இதன் காரணம் என்ன ? சிலர் நமக்கு எதிராக செயல்பட்டார்கள் என்று நம்பினால் அல்லது தனிப்பட்ட முறையில் ஒருவர் நம்மை எதிர்த்தால் அங்கு நாம் முதலில் இரக்கம் பாராட்ட வேண்டும். ஆனால் தீமை செய்தவர்களை மன்னிக்க மனதில்லாததினால் அநேக கிறிஸ்தவர்கள் இரக்கம் காட்ட தவிறிவிடுகிறார்கள்.

சிறப்பான கொள்கை மற்றும் கிறிஸ்துவ ஐக்கியத்தின் கருத்தைப் பற்றியும் வசனங்கள் தெளிவாகக் கூறுகிறது. உண்மையில் நமக்குள் அநேக கருத்து வேறுபாடுகளும் பிரச்சனைகளும் எழும்பலாம். அதினிமித்தம் நாம் முறையிடலாம். இப்படிப்பட்ட காரியங்கள் நடந்தால், "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (கொலோசெயர் 3:12,13) என்று பவுல் நமக்கு ஆலோசனை கூறுகிறார். "நீடியபொறுமை" என்பதற்கு சகலத்தையும் விட்டுக்கொடுப்பது என்று பொருள். எந்த பிரச்சனைகளையும், பிரிவினை உண்டாக்கும் அளவுக்கு நாம் வளர்த்துவிடக்கூடாது. கிறிஸ்து நமக்கு மன்னித்தது போல நாம் ஒருவர் மேல் ஒருவர் நீடிய பொறுமையோடு மன்னிக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார்.

ஆயினும் உண்மையான கிறிஸ்துவ ஐக்கியத்தில், சில பிரச்சணைகள் ஏற்படும்

சூழ்நிலைகளில் நாம் அந்த காரியத்தை அப்படியே விட்டுவிடக்கூடாது என்று வசனங்கள் கூறுகிறது. உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக.அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்கா 17:3,4) என்று இயேசு கூறிகிறார்.

வித்தியாசமான சூழ்நிலைகள், வித்தியாசமான முறையில் கையாளப்பட வேண்டும். சில நேரங்களில் நீடிய பொறுமையோடு மன்னிக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். ஆனால் சில நேரங்களில் மனம் திரும்பி மன்னிப்பைப் பெறும் சூழ்நிலைக்குத் தேவையான கடிந்து கொள்ளுதல் தேவைப்படும் " உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானா னால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக" மத்தேயு 18 :15-17 என்று இயேசு சொன்ன காரியங்களின் சுருக்கமாய் இருக்கிறது.

விட்டுவிட வேண்டிய காரியங்களுக்கும் மற்றும் பாவத்திலிருந்து மனம் திரும்பி சகோதர ஐக்கியத்தில் இசைந்திருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். மத்தேயு 18ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட சூழ்நிலை மிகக் கடுமையாக உள்ளது. அந்த தனிநபர் மனம் திரும்புவதற்கு தவறினால், அவர் சபை கூடுதலுக்கு வந்தாலும் கூட ஐக்கியத்திற்கு புறம்பானவராகக் கருதப்படுவார்.

ஒருவருக்கெதிராக ஒருவர் தீங்கிழைத்தால் அந்த பிரச்சனைகளை தீங்கிழைத்தவரிடம் பகிர்ந்துக் கொள்ளாமல் மூன்றாவது நபரிடம் சென்று நடந்த கரியங்களைத் தெளிவாகக் கூறுவார்கள். அந்த பிரச்சனையை கூறும் அளவுக்கு அது பெரிதாக இல்லாவிட்டால், நீடிய பொறுமையோட மன்னித்து அந்த பிரச்சனையை அப்படியே விட்டுவிடுவது நல்லது. இதை தவிர மூன்றாம் நபரிடம் காரியங்களை எடுத்துச் செல்வது மிகத் தவறாகும். இப்படிப்பட்ட ஆவியே மனித பலவீனங்களைப் புரிந்துகொண்டு, கிறிஸ்துவின் சரீர ஐக்கியத்தை ஒற்றுமையோடு வளர்ச்சிக்குள்ளாக்கும். "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்." (எபேசியர் 4 :2,3) என்று நாம் பெற்ற அழைப்பிற்கு பாத்திரராக நடக்கும்படி பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்.

## இரக்கம் மற்றும் மன்னிப்பு

மத்தேயு 18:21,22 மற்றும் லூக்கா 17:3-6 வசனங்களிலுள்ள செய்திகளை நாம் இணைத்துப் பார்க்கையில் அநேக ஆர்வமூட்டும் காரியங்களை நாம் காணலாம். நமக்கு எதிராக மீண்டும் மீண்டும் ஒருவர் பாவம் செய்து மன்னிப்பைப் பெற விரும்பினால் நாம் நிச்சயமாக மன்னிக்க வேண்டுமென்று இயேசு கூறுகிறார். நம்முடைய உதடுகளினால் மட்டுமல்ல நம்முடைய இருதயத்திலிருந்து நாம் மன்னிக்காவிட்டால், உண்மையில் நாம் கற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். மேலும், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்புமில்லை. "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்...." (மத்தேயு 18:35) என்ற இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அப்போஸ்தலர்கள் மனப்பூர்வமாய் மன்னிக்கக்கூடிய ஆவியைப் பெறுவது எவ்வளவு கடினம் என்று உணர்ந்து, "..... எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்...." (லூக்கா 17:5) என்று இயேசுவிடம் வேண்டினார்கள். "அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்."
(லூக்கா 17:6) என்று இயேசு பதிலளித்தார்.

விசுவாசத்திற்குரிய எவ்வளவு விசேஷித்தப் பாடம்! இங்கு அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் தங்களுடைய சொந்த பெலவீனத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால் வல்லமையான தேவனுடைய ஆவி அவர்களின் விசுவாசத்தை வளர்த்து, செயலாற்றும் என்று இயேசுவின் வார்த்தைகள் அவர்களை ஊக்குவித்தது. அதாவது ஒரு காட்டத்திமரம் வேரோடு பிடுங்கப்பட்டு கடலில் நடப்படுவதைக் காட்டிலும், அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய காரியங்கள் தேவ ஆவியினால் நடக்கும் என்பதை இயேசு கூறினார். சாதாரண மனிதர் தங்களால் இயலாத காரியங்களை அதாவது ஏழு ஏழுபது முறை தங்களுடைய இருதயத்திலிருந்து எதிராளிகளை மன்னிக்கக்கூடிய காரியங்களை - அற்புதமான தேவ ஆவியால் நடப்பிக்க முடியும் என்பதை சீஷர்கள் உணர்ந்தார்கள்.

## இரக்கமும் நீதியும்

நாம் எந்த அளவுக்கு இரக்கம் பாராட்டுகிறோமோ அந்த அளவுக்கு அது நீதியோடு தொடர்பு கொண்டிருக்கிறது. இவைகள் இரண்டும் தேவனுடைய

முக்கியமான குணங்களாக இருப்பினும், இவைகள் ஒன்றோடு ஒன்று முரண்பாடாக செயல்படுவது இல்லை. நீதி சரிகட்டப்படவேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்த்து குருட்டாட்டமான இரக்கம் பாராட்டுவதை வசனங்கள் ஊக்குவிப்பதில்லை. நீதியை நிலைநாட்டாத இடத்தில் இரக்கம் காண்பிக்கப்படுவதில்லை. சிறிய காரியங்களானாலும் பெரியகாரியங்களாலும் சரி, தவறுகள் அல்லது குற்றங்கள் புரிந்தபின் மனப்பூர்வமாய் மனம் திரும்புவோருக்கு நிச்சயமாக இரக்கம் பாராட்ட வேண்டுமென்று வசனங்கள் கூறுகிறது. குற்றம் புரிந்தவர் தாங்கள் செய்த அநீதியை உணர்ந்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்பினால் அவர்கள் மனப்பூர்வமாய் மன்னிக்கப்படவேண்டும்.

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்." (யாக்கோபு 2 :13 ) என்று யாக்கோபு மிக அழகாக மேல் கூறப்பட்ட காரியங்களை வெளிப்படுத்துகிறார். இங்கு யாக்கோபின் செய்தி இயேசுவின் மலை பிரசங்கத்தின் அடிப்படையைக் கொண்டுள்ளது. இரக்கமில்லாதவர்கள் நிச்சயமாக இரக்கமற்ற நியாயதீர்ப்பைப் பெறுவார்கள். ஆகவே, நியாயத்தீர்ப்பின் மேல் இரக்கம் மேன்மை பாராட்டுகிறது.

இரக்கமுள்ள நியாயத்தீர்ப்பு கொடுப்பவர்களுக்கு மேலான குணத்தை மட்டும் கொடாமல், பாவம் செய்தவர், மனந்திரும்பி சீர்பொருந்துவதற்கு சிறந்த சூழ்நிலைகளை உருவாக்குகிறது. இரக்கமுள்ள நியாயதீர்ப்பு என்றால் தாராளமான ஆவியோடு, மனப்பூர்வமாய் சகித்து, பாசத்தோடு மன்னிக்க வேண்டும். பாவங்கள் சிறிதானாலும் சரி, பெரிதானாலும் சரி அவர்களுக்கு கொடுக்கப்படும் இரக்கமுள்ள நியாயத்தீர்ப்பு தாராளமான தேவ ஆவியின் செயலாற்றமாக இருக்கிறது. இந்த ஆவி பாவிகளுக்கும் பாவத்திற்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்டி, மனப்பூர்வமாய் தங்களுடைய பாவத்திற்கு மனம் வருந்துவோருக்கு மன்னிப்பளிக்கிறது. கண்டிப்பான நீதியின் அடிப்படையில் ஒருவருக்கு நன்மை செய்வதைக் காட்டிலும், இப்படிப்பட்ட சூழ்நிலையில், இரக்கம் காட்டுபவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் என்ற மற்றொரு காரியத்தை யாக்கோபின் வார்த்கைள் பொருள்படுத்துகிறது.

## நீதியும், இரக்கமும் இணைந்து செயல்படுதல்

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் -நீதியும், இரக்கமும் இணைந்து செயல்படக்கூடிய சில காரியங்கள் நம்முடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய ஒரு நல்ல மாதிரியாக இருக்கிறது. "மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச்செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம். ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம். சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள். மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள். சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக." (11தெசலோனிக்கேயர் 3:6-16)

நியாயமான நீதியை இரக்கத்தின் கிரியைகள் துல்லியமாக சரிக்கட்டுவதை பவுலின் வல்லமையுள்ள வார்த்தைகள் நமக்கு வெளிப்படுத்துகிறது. இந்த எடுத்துக்காட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் இரக்கமுள்ள கிரியைகளை இரு வழிகளில் ஊக்குவிக்கிறார். முதலாவது - மற்றவர்களை சிரமப்படுத்தாமல், அதாவது இலவசமாய் உணவு புசியாமல், அவர்களுக்கு பாரமாய் இராதபடிக்கு பவுல் தன்னையே ஒரு மாதிரியாக முன் வைக்கிறார். தேவனுடைய நீதியை நிலைநிறுத்துவதற்காக அவருக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமையை விட்டுக் கொடுத்தார். தனக்கு மட்டுமல்ல மற்றவர்களிடமும் இரக்கமாக நடந்துக்கொள்வதை செயல் முறையில் காண்பித்தார். அதாவது மற்றவர்களிடம் அவர் பெறகூடிய நியாயமான உரிமைகளை விட்டுக்கொடுத்து அதிகமான பாசத்தையும், அன்பையும் அவர்களிடம் வெளிப்படுத்தினார். அதை நமக்கு ஒரு மாதிரியாக வைத்திருக்கிறார். இரண்டாவதாக - தங்களுக்கு எதிராக குற்றம்புரிந்த சகோதரர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய விதத்தைக் குறித்து அவர் கட்டளை

கொடுத்த போது இரக்கம் அதிகதிகமாய் விருத்தி அடைந்ததை நாம் காணலாம். அவர்களின் செய்கைக்கு தக்கதாக பதில் செய்யவேண்டாம் என்று பவுல் ஊக்குவிக்கிறார். ஏனெனில், இரக்கத்தினால் நீதியை சரிக்கட்டவேண்டும். மூன்று காரியங்களை செய்யும்படி சகோதரர்களுக்கு கற்பிக்கப்பட்டது.

1. சுறுசுறுப்பற்றவர்களுக்கு துணைநிற்க வேண்டாம். 2. அவர்களை அவமானப்படுத்தும்படி எந்த காரியமும் செய்யவேண்டாம். 3. தன்னுடைய சொந்த சகோதரனைப் போல அவர்களை எச்சரிக்கவேண்டும். குற்றம் புரிந்தவர் ஐக்கியத்தை விட்டு வெளியேறுவதற்கு அல்ல, அவர்களின் குற்றம் உணர்த்தப்பட்டு மீண்டும் அவர்கள் சமாதானத்திற்குள் பிரவேசித்து மற்ற சகோதரர்களோடு இசைந்திருப்பதற்காக இந்த மூன்று காரியங்களையும் செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம். சகோதரர் மத்தியில் ஏற்படும் மிக முக்கியமான பிரச்சனைகளை விட்டுவிடுவதற்கு பவுல் ஆலோசனை கூறுவதில்லை. ஏனெனில் இப்படிப்படட காரியங்களை விட்டுவிடுவதினால் அங்குள்ள மற்ற சகோதரர்கள் அதே குற்றங்களைத் துணிகரமாய் செய்வதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள். இதன் விளைவாக சபை ஐக்கியத்தின் மத்தியில் கருத்து வேறுபாடுகளும், பிரிவினைகளும் உருவாகத் துவங்கும்.

## தேவனைப் போல் இருப்பது

இரக்கமாய் இருப்பவர்கள் தேவனைப் போல் இருக்கிறார்கள் என்று இயேசு கூறுகிறார். பாவிகளை மனம் திருப்புவதற்கும் நீடிய பொறுமையோடு காத்திருந்து, சின்னசின்ன காரியங்களைக் காணாமல் விட்டுவிடுவதற்கும் பிதாவின் தாராளமான பரிசுத்த ஆவி வாய்ப்பளிக்கிறது. நமக்குள் இருக்கும் இரக்கமுள்ள ஆவி கிறிஸ்துவின் சரீர அங்கத்தில் வளர்ச்சி அடைவதற்கு மிகப்பெரிய வாய்ப்பளிக்கிறது. இப்படி செய்வதினால் தனிப்பட்ட முறையிலோ அல்லது ஒரு குழுவாகவோ இந்த ஆவியின் ஐக்கியத்தின் சமாதானத்தில் கூட்டப்பட்ட நிலையை நாம் தக்க வைத்துக்கொண்டால்

"நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது."

யாக்கோபு 3:18 என்று யாக்கோபும் எழுதுகிறார்.

பிதா இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். அவரே நம்முடைய சிறந்த மாதிரி. "கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது. கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள" (சங்கீதம் 145:8-10)

தேவனுடைய புகழ்ச்சிக்கு பாத்திரவான்கள்

# இரக்கமும், கிருபையும்



கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன் - யாத்திராகமம் 34:6

David Stein

சங்கீதங்கள், பாடுவதற்காக எழுதப்பட்டது. இப்படியாக, 103-ம் சங்கீதம் மிக அருமையாகப் பாடப்பட்டிருக்க வேண்டும். தாவீதின் இறுதி நாட்களில் இந்த சங்கீதம் எழுதப்பட்டது. அநேக சோதனைகள் மற்றும் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளின் வழியாக அவர் பெற்ற தேவனுடைய இரக்கத்தை இந்த காலக் கட்டத்தில் முழுமையாக அவர் உணர்ந்தார்.

## யோகோவாவை ஸ்தோத்தரி - சங்கீதம் 103:1,2

*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.*

தேவனுடைய தெய்வீக நாமத்திற்கு மிக நெருக்கமான நட்புறவுடன் இந்த சங்கீதம் வழிநடத்துவதை இந்த வசனங்கள் காட்டுகிறது. நாம் யேகோவாவை எவ்வாறு ஸ்தோத்திரிப்பது? நம்முடைய யேகோவா தேவன் துதிகளுக்கும், ஆராதனைக்கும் பாத்திரராய் இருக்கிறார். இந்த ஆராதனைகள் அவருக்கு தேவை என்ற காரணத்தினால் நம்மிடம் எதிர்ப்பார்க்காமல் நம்முடைய அன்பான சிருஷ்டிகளின் ஐக்கியத்தினால் நாம் பெறும் உச்சக்கட்ட மகிழ்ச்சிக்காகவும், சந்தோஷத்திற்காகவும் திருப்திகரமான வாழ்க்கைக்காகவும் நாம் இப்படி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். தேவனை மகிமைப்படுத்துவதில் மற்றுமொரு முக்கிய காரணமுண்டு. நம்முடைய கிரியைகளும், வார்த்தைகளும் தேவனிடம் அதிகமான பக்தியை வெளிப்படுத்தும் போது, மற்றவர்கள் தேவனிடம் பக்தியாய் இருப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வாய்ப்பளிக்கும். இப்படியாக நாம் தேவனை மகிமைப்படுத்தி ஸ்தோத்திரிப்பவர்களாக இருப்போம் !

"என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி" என்ற வார்த்தைகள் தாவீதின் அர்ப்பணிக்கப்பட்ட மனநிலையைக் காட்டுகிறது. நம்முடைய சகலத்தையும் அன்பான சிருஷ்டிகருக்குக் கொடுப்பதே அர்ப்பணிப்பு என்கிறோம். ஒருவகையில், இஸ்ரயேலும் தங்களை அர்ப்பணிப்பதற்குக் கட்டளைப் பெற்றிருந்தார்கள். "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபாகமம் 6:5) தாவீது இப்படிப்பட்ட மனநிலையில் இருந்தார். அந்த உணர்வானது தேவனுடைய நாமத்தையும், அவருடைய அற்புதமான குணங்களையும் மற்றவர்களிடம் அறிவிப்பதற்கு ஊக்குவித்தது. மற்ற சங்கீதங்களைப்போல கூட்டிசை வடிவாக இந்த சங்கீதத்தையும் துவக்குகிறார். உடனடியாக, யேகோவா தேவன் தன்னுடைய ஜனங்களுக்கு கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்களை நினைப்பூட்டுகிறார். நம்முடைய வாழ்க்கையில் அவருடைய உண்மையான பிரசன்னம் இருப்பதை உணர்த்துவதற்கு, அடிக்கடி இப்படிப்பட்ட வார்த்தைகள் நம்மை நினைப்பூட்டுகிறது. தேவன் எதிர்பார்க்கும் பலிகளில் மிகக் குறைவானதை நாம் செலுத்தினாலும் கோடிக்கணக்கான நன்மைகளை நம்முடைய அனுதின வாழ்க்கையில் அவர் கொடுத்துக் கொண்டிருப்பதற்காக நித்தமும் அவரை நன்றியோடு ஸ்தோத்திரிப்போம்.

## தேவன் அளிக்கும் நன்மைகள்

*அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது.*

நன்மை 1- நம்முடைய அக்கிரமங்களை மன்னித்தல்

பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்ற தாவீது, அதனால் அவர் பெற்ற ஆசீர்வாதங்களை நன்கு அறிந்திருந்தார். இப்படிப்பட்ட பாவத்தின் பாரங்கள் தங்களுடைய தோளிலிருந்து எடுக்கப்பட்ட உணர்வை பெற்ற அனைவரும், தவறு செய்வதினால் வரும் குற்றஉணர்வினால் அந்த பாவங்களிலிருந்து கழுவப்பட்டு உறுதிபெற்ற பின் கிடைக்கும் மன்னிப்பு, அளவில்லாத ஆசீரைத்தரும் என்பதைப் புரிந்துக்கொள்ளுவார்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1யோவான் 1:9)

நாம் தேவனிடத்திலிருந்து பெற்ற மன்னிப்பைப்போல நமக்கு எதிராய் பாவம் செய்தவர்களை மன்னிக்க வேண்டுமென்று இயேசு நமக்குக் கற்பித்தார். (மத்தேயு 6:14,15)

**நன்மை 2 - நோய்களை குணப்படுத்தல்**

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் இஸ்ரயேலருக்கு பிதாவாகிய தேவன் மாம்சத்துக்குரிய ஆசீர்வாதங்களை

வாக்களித்தார். இது, புறஜாதிகளின் மத்தியில் காணப்பட்ட அநேக வியாதிகளிலிருந்து இவர்களைப் பாதுகாத்தது. அந்த ஜாதிகளின் அசுத்தமான பழக்கவழக்கங்களிலிருந்து அநேக வியாதிகள் உருவானது. மோசேயின் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள், இப்படிப்பட்ட வியாதிகளிலிருந்து இஸ்ரயேலரைக் காத்தது.

ஆயினும், மாம்சத்திற்குரிய சுகங்கள் சபைக்கு வாக்களிக்கப்படவில்லை. நாம் ஆவிக்குரிய காரியங்களை மட்டுமே நம்பிக்கையாக கொண்டிருக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவைப்படும் அநேக வாக்குறுதிகள் வாக்களிக்கப்பட்டுள்ளது. சபைக்கு தேவன் மாம்சீக சுகத்தை வாக்களிக்கவில்லை என்ற காரியத்தை நாம் நம்முடைய அப்போஸ்தலர்களின் அனுபவங்களைப் பார்த்து அறிந்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பரிசுத்தவானும் மரணபரியந்தம் அவர்கள் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றின காரியத்தை நாம் சிந்திக்கும் போது, இதன் விளக்கத்தை அறிந்துக்கொள்ளலாம். தங்களுடைய ஆண்டவரைப்போல இவர்களும் ஜீவபலிகளாக மரிப்பதற்கு முன் குறிக்கப்பட்டார்கள் -ரோமர் 12:1"நித்தமும் ஜீவ பலியாக", மரிக்கும் அனுபவங்களானது, மரித்துக் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் அனுபவங்களை நன்கு உணர்ந்துக்கொள்ள நம்மை அனுமதிக்கிறது.

ஆயினும், நம்முடைய இருதயத்திலும் சிந்தையிலும், தெய்வீக சுகத்தை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய ஆண்டவரின் கரங்கள் தொடுவதினால் சொஸ்தமடைகிறோம். நம்முடைய சிந்தையும், இருதயமும் ஆவிக்குரிய சுகம் பெறுவதற்கு புதுப்பிக்கப்படுகிறது. இப்படியாக நாம் யேகோவா தேவனின் மகிமையான சாட்சிகளாகக் கொழுந்து விட்டு எரிகிறோம். மேலும், கேட்கக் கூடிய அனைவருக்கும் இந்த சுவிசேஷத்தின் செய்தியை தொடர்ந்து அறிவித்துக்கொண்டு இருக்கிறோம். மேலும் ஒவ்வொருவரின் ஆவிக்குரிய நெருக்கங்களில், நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்யக்கூடிய சிறப்பான வாய்ப்பை சபை அங்கத்தினர் மத்தியில் பெற்றிருக்கிறோம். இரக்கம், கருணை மற்றும் தயை போன்ற குணங்கள் நமக்குள் வளர்ச்சி அடையும்போது "சகல ஆவிக்குரிய வியாதிகளும்" குணமாக்கப்படும் என்ற நம்பிக்கையோடு நமது சகோதரர்களின் ஆவிக்குரிய தேவைகளுக்கு ஏற்றபடி உதவி செய்யலாம்.

**நன்மை 3- இரட்சித்தல்**

உண்மையில் இந்த முழு மனுக்குலத்தின் சூழ்நிலை பரிதாபமாகவே இருக்கிறது. இவர்கள் பாவத்திற்கும் மரணத்திற்கும் விற்கப்பட்டார்கள். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள எந்த வழியும் இல்லை. (சங்கீதம் 49:7) ஆனால், இயேசுவின் பலியின் மூலம் பிதாவாகிய தேவன் மனுக்குலத்திற்கு இரட்சிப்பை அளித்தார். நம்முடைய ஆண்டவர் தன்னுடைய ஜீவனைக் கொடுக்காவிட்டால் ஒருவரானாலும் இந்த அழிவுக்கு தப்பிப்போவதில்லை. ஆனால் பிதாவாகிய தேவன் ஆதாமுக்கு பதிலாக இயேசுவை சரி நிகர் சமமான விலையாக ஏற்றுக்கொண்டு, அவருடைய நீதி நிறைவேற்றி, ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் மரணத்திலிருந்து மீட்பளித்தார். இப்படியாக, மனுஷனாக பிறந்த ஒவ்வொருவரும் மரணத்திலிருந்து காலப்போக்கில் மீட்கப்படுவார்கள்.(1தீமோத்தேயு 2:4)

**நன்மை -4 கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டப்படுதல்**

"தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1யோவான் 4:8) என்று இயேசு கற்பித்தார். இந்த காரியத்தை நாம் இன்றும், இந்த உலகத்தில் காணலாம். ஆனால் இதை தெளிவாக பார்ப்பதற்கு விசுவாசத்தின் கண்கள் தேவைப்படுகிறது. இந்த உலகமானது தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும் அநேக துன்மார்க்கத்தையும், சுயநலத்தையும், பகையையும், மட்டுமே காண்கிறது. ஆனாலும் தேவனுடைய அன்பையும், அவர் நமக்குக் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்களிலும், அவருடைய இரக்கத்தினால் செயல்படும் மனிதக் குடும்பத்திலும் காணலாம். மேலும், உண்மையில், தங்களை முழுமையாக அர்ப்பணித்த கிறிஸ்துவின் சீஷர்களிடம் இந்த அன்பையும், இசைவையும் காணலாம்.

**நன்மை 5 - நன்மையினால் திருப்தியடைதல்**

நியாயமான காரியங்களையும், நீதியுள்ள காரியங்களையும், நேர்மையுள்ள காரியங்களை விரும்பும்படி தேவன் மனுஷனை சிருஷ்டித்தார். நமக்குள் அவர் ஏற்படுத்தியிருந்த விருப்பங்களைப் பூர்த்திச்செய்வதற்கான ஏற்பாடுகளையும் அவர் செய்திருந்தார். இந்த அன்பான ஏற்பாடுகளை - "நன்மைகள்" என்று சங்கீதக்காரர் கூறுகிறார். ஆயினும், முறைகேடான விருப்பங்கள் எழும்போது பிரச்சனைகள் வரலாம். எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதாக தேவன் நமக்கு வாக்களிக்கவில்லை. ஆனால் நம்முடைய நியாயமான தேவைகளை அபரிதமாக கொடுப்பவராக இருக்கிறார். "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." (சங்கீதம் 37:4,5) என்ற மிக அழகான வாக்குத்தத்தை நமக்கு கொடுத்திருக்கிறார்.

இந்த விசேஷித்த வாக்குத்தத்தமானது, நீதியுள்ளவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய ஆண்டவராகிய யேகோவா தேவனோடு "மனமகிழ்ச்சியாயிருப்பதற்கான" அழைப்பாக இருக்கிறது.

**நன்மை 6 - உன் வயது வாலவயது போலாகும்**

இந்த வாக்குறுதி சொல்லர்த்தமாக நமக்கு உண்மையாய்த் தோன்றினாலும், தேவனுடைய இராஜ்யத்தில் முழு மனுக்குலமும், இந்த வாக்குத்தத்ததைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (யோபு 33:24,25) மேலும் நம்மை மெய்சிலிர்க்கவைக்கும் மற்றும் ஒரு நிறைவேற்றமும் உண்டு. நம்முடைய பரலோகத் தந்தை சர்வவல்லமையுள்ள தேவனும், ஏற்றக்காலத்தில் ஏற்ற காரியத்தை செய்பவருமாய்

இருக்கிறார். காணக்கூடிய முழு அண்டசராசரமும் தேவனுடைய தெய்வீக வல்லமையின் மிகச்சிறிய பகுதியாய் இருக்கிறது. உண்மையில் அவருடைய வார்த்தைகளில் அவருடைய சர்வ வல்லமையின் நிலையைக் காணலாம்."தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." (எபிரெயர் 4:12)."ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." (யோவான் 6:63)

நம்முடைய வாலிப பிராயத்தில் தேவனுடைய வார்த்தைகளில் காணப்பட்ட வல்லமையினால் நம்முடைய முழு பலத்தோடு செயல்படுகிறோம். தேவனுடைய இராஜ்யத்தில் முழு மனுக்குலத்திற்கும் தேவனுடைய இரக்கம் செயலாற்றப்படுவதை நாம் வாசிக்கையில், பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இப்படிப்பட்ட விலை உயர்ந்த வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய திட்டங்களையும், மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்வதற்கு, நமக்குள் இருக்கும் உற்சாகம் நம்மை தூண்டுகிறது. நாம் வேதனைகளில் இருந்தாலும் வியாதிகளில் அகப்பட்டிருந்தாலும் அல்லது நம் பொறுப்புகளின் நிமித்தம் நாம் சோர்ந்து போயிருந்தாலும் இப்படிப்பட்ட சத்தியத்தினால் நாம் புத்துணர்ச்சி பெற்று ஜீவனுள்ளவர்களாய் மாறுகிறோம்.

**தேவனுடைய நீதி - சங்கீதம் 103 :6-8**

*ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.*

யேகோவா தேவன் மனுகுலத்தை நேசிக்கிறார். இதை அப்போஸ்தலனாகிய யோவான் சாட்சியாக அறிவிக்கிறார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16)

நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மனுக்குலத்திற்கு தேவையான பாதுகாப்பையும், உதவிகளையும், குறித்த காலத்தில், தான் நியமித்த இராஜாவாகிய இயேசுவைக் கொண்டு இரக்கத்தின் தேவன் செய்து முடிப்பார்.

(சங்கீதம் 2:2-6) இயேசு நீதியாய் ஆட்சி புரிந்து, சாந்தகுணம் உள்ளவர்களுக்கு சாதகமாய் நியாயத்தீர்ப்பை அளிப்பார். இந்த பரிசுத்தமான ஆளுகைக்கு பங்காளிகளாக இருப்போம் என்று நம்புகிறவர்கள், இரக்கத்தையும் நீதியையும் செயலாற்றி, இயேசுவை இக்காலத்தில் பிரதிபலிக்க வேண்டும். பிதாவாகிய யேகோவா தேவன் தன்னை ஆராதிப்பவர்களுக்கு தன்னுடைய இரக்கத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்துகிறார். மத்தியஸ்தராகிய மோசேயின் வழியாக கொடுக்கப்பட்ட நியாயபிரமாணத்தின் மூலம் பிதாவாகிய தேவன் இஸ்ரயேலுக்கு தம்மை வெளிப்படுத்தினார். "ஜீவனுக்கு ஜீவன்" என்ற கண்டிப்பான கட்டளைகளைக் குறித்து சில நேரங்களில் நாம் பேசுவது உண்டு. ஆனால் இந்த பிரமாணங்கள் -சில ஒழுக்கங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு இருக்கும் காரியம், தேவன் தம்முடைய ஜனத்தின்மேல் வைத்த அன்பைக் காட்டுகிறது.

அவருடைய பிரமாணத்தின் எடுத்துக்காட்டைக் காணலாம். "நீ புதுவீட்டைக் கட்டினால், ஒருவன் உன் மெத்தையிலிருந்து விழுகிறதினாலே, நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேல் சுமத்திக்கொள்ளாதபடிக்கு, அதற்குக் கைப்பிடிச்சுவரைக் கட்டவேண்டும்." (உபாகமம் 22:8)

நவீன கட்டுமான பணியின் கோட்பாட்டைப்போல இது தோன்றலாம். வீட்டின் கூரையிலிருந்து கீழே விழுந்து தங்களை காயப்படுத்திக் கொள்ளாதபடிக்குக் கொடுக்கப்பட்ட இந்த பிரமாணத்தில், தேவனுடைய இரக்கத்தையும் அன்பையும் காணலாம். இப்படிப்பட்ட காரியங்கள் யேகோவா தேவனின் குணங்களை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு வெளிப்படுத்தியது. இந்நாள் வரைக்கும் இன்னும் அநேக விபரங்களோடு தம்முடைய ஜனத்திற்கு தம்மை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறார்.

தேவன் ஒரு காரியத்தை அறிவிக்கும்போது, முதலில் தாமே அதை செயலாற்றக் கூடியவராய் இருப்பார். சரியான நோக்கத்துடன் இருப்பவர்கள் மட்டுமே இதை புரிந்துக்கொள்ள முடியும். சுயநலத்தினாலும், பெருமையினாலும் தங்களை மூடிக்கொண்டு இருப்பவர்கள் யேகோவா தேவனின் பூரண குணலட்சணங்களைப் பார்க்க முடியாத குருடராய் இருக்கிறார்கள்.

தேவனுடைய இரக்கத்திற்கும், அன்புக்கும், ஏராளமான தயவுக்கும், கிருபைக்கும் எவ்வளவு ஆதாரங்கள் உண்டு. அதில் சிலவற்றை நாம் காணலாம் -

1.ஆதாம் மற்றும் ஏவாள் செய்த பாவத்திற்கான மரணத்தீர்ப்பை அவர் உடனடியாக நிறைவேற்றவில்லை.
2.தீமை நிறைந்த உலகத்தின் நியாத்தீர்ப்பிலிருந்த நோவாவையும், அவர் குடும்பத்தையும் தேவன் காத்துக்கொண்டார்.
3. அவர் ஆபிரகாமை சிநேகித்து ஆசீர்வதித்தார்.
4.ஆபிரகாம் மற்றும் சாராளுக்கு அற்புதமான விதத்தில் ஒரு குழந்தையைக் கொடுத்தார்.
5.நீதியுள்ள யோசேப்பின் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து யாக்கோபின் முழு குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு வழிவகுத்தார்.
6.எகிப்திலிருந்து இஸ்ரயேலை மீட்டார்.

7.நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேலுக்குக் கொடுத்தார்.
8.வாக்களிக்கப்பட்ட தேசத்தை இஸ்ரயேலுக்குக் கொடுத்தார்.
9.இஸ்ரயேலர்களை, போதித்து வழிநடத்துவதற்கான தீர்க்கதரிசிகளையும், நியாயதிபதிகளையும் கொடுத்தார்.
10.கீழ்ப்படிந்தவர்களை எப்போதும் ஆசீர்வதித்தார்.
11.இந்த உலகத்தை இரட்சிக்கத் தம்முடைய ஒரே பேரான குமாரனை கொடுத்தார்.
12.இயேசுவின் சீஷர்களை பரலோக இரட்சிப்புக்கு அழைத்தார்.

தேவனுடைய இராஜ்யத்தில் மனுகுலத்தின் ஆவிக்குரிய பார்வையற்ற நிலை நீக்கப்பட்ட பின் அவருடைய அன்பையும் இரக்கத்தையும் அனைவரும் உணர்ந்து கொள்வார்கள். (ஏசாயா 11:9, ஆபகூக் 2:143)

**தேவன் நீடிய பொறுமை உள்ளவர் - சங்கீதம் 103: 9-10**

*அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொண்டிரார்.*

*அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.*

தேவன் நம்மேல் வைத்த பொறுமையானது, அவருக்குள் இருக்கும் அதிகமான இரக்கத்தை வெளிப்படுத்துகிறது. நித்தமும் நாம் செய்யக்கூடிய தவறுகளுக்கு அவர் நம்மை நித்தமும் தண்டிக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி செய்வதில்லை. ஆகவே அவருடைய பொறுமைக்கும் இரக்கத்திற்கும் முடிவே இல்லை. ஏனெனில் அவருடைய அன்பு பூரணமானது. குறித்த காலம் வரும்போது நீதியின் அளவுகோல் சரிகட்டப்பட்டு துன்மார்க்கமான காரியங்களுக்குத் தக்கபலன் அளிக்கப்படும். அந்நேரத்தில் தேவனுடைய கோபம் வெளிப்படும். ஆனாலும் அவருடைய தண்டனை சற்று குறைவாகவே இருக்கும்.

நாம் அபூரணராய் இருக்கும் காரணத்தினால் மரணத்திற்கு பாத்திரராய் இருக்கிறோம். ஆனால் நம்முடைய பாவத்திற்குச் சட்டப்பூர்வமான ஒரு போர்வையை நம்முடைய அன்பான பரலோகத் தந்தை கொடுத்திருப்பதால், நம்முடைய இருதயத்தின் நோக்கங்களின் படியே நம்மோடு அவர் தொடர்பு கொள்ளுகிறார். பவுல் கூறியபடி -"ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும். மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன்." (11கொரிந்தியர் 8:12)

எவ்வளவு இரக்கமுள்ள ஏற்பாடு! நாம் செய்ய விரும்பும் காரியத்திற்காகவும், நாம் பிதாவின் சித்தம் செய்ய விரும்புவதினாலும், குமாரனின் சாயலை நாம் அடைய வாஞ்சிப்பதினாலும் பிதாவாகிய தேவன் நம்மை நேசிக்கிறார். இந்த பரிபூரணமான விருப்பம் அல்லது பரிபூரணத்தை அடையவேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்களை தேவன் வழிநடத்தி மிகுதியாய் ஆசீர்வதிக்கிறார்.

அவரை நேசித்து அவரிடம் பயபக்தியாய் இருப்பவர்கள் மேல் அவர் கொண்டிருக்கும் ஆழமான அன்பை நாம் அறிந்துக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். "பூமிக்கு மேல் இந்த வானங்கள் எவ்வளவு உயரமாய் இருக்கிறது ?" நாம் எப்படி சொன்னாலும் இது ஒரு மிகப்பெரிய அளவாகும். அதேபோல் அவருடைய அன்பும் கருணையும் மிக அதிகமானது. வார்த்தைகளில் சொல்லப்போனால் தேவனுடைய இந்த குணத்தை நாம் அளவிட முடியாது.

கிழக்கிற்கும் மேற்குக்கும் உள்ள தூரம் எவ்வளவு ? இதுவும் அளவிடமுடியாத ஒரு காரியம். பாவங்களை நீக்கி முழுமையாக அவைகளை மன்னிப்பதற்கு நம்முடைய அன்பான தேவன் இரக்கமுள்ள ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார்.

**தேவனுடைய கருணை - சங்கீதம் 103 :13-18**

*தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உளளது. அவருடைய உடன்படிக்கையைக்கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது.*

அன்பு, இரக்கம், கனிவு, பொறுமை, தயவு போன்ற காரியங்களைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மேல் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உணர்வுகளையும், எண்ணங்களையும் நம்முடைய பிதாவாகிய தேவன் இந்த முழு மனுக்குலத்தின் மேல் வைத்திருக்கிறார் என்பதை நாம் அறிந்துக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்.

நம்முடைய பலவீனங்களைக் குறித்து அளவில்லா அறிவை அடிப்படையாகக் கொண்ட பிதாவாகிய யேகோவா தேவன் நம்மேல் இரக்கம் வைத்திருக்கிறார். நம்மில் ஒவ்வொருவரின் மனநிலையையும், உடல்நிலையையும் மிக துல்லியமாக அவர் புரிந்து வைத்திருக்கிறார். அதன் அடிப்படையில் நம்மை அவர் நடத்துகிறார்.

மனித வாழ்க்கை, தவறுகள் நிறைந்ததும், மிகக் குறுகியதுமாய் இருக்கிறது. தங்களுடைய வருடங்கள் எவ்வளவு வேகமாய் சென்றது, என்ற காரியத்தை வயது முதிர்ந்த அனைவரும் கூறுவதை நாம் கேட்கலாம்.

அவரை பயபக்தியோடு தொழுது கொள்ளபவர்களுக்கு தேவன் காட்டும் கருணை ,

அவருடைய இரக்கத்தின் மற்றொரு செயலாக இருக்கிறது. அவரோடு கொண்டிருக்கும் இந்த உடன்படிக்கையின் ஐக்கியமானது, உடன்படிக்கை செய்த ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களின் ஆவிக்குரிய தேவைகளைக் கவனத்தோடு பூர்த்தி செய்கிறார். ஆகவே உடன்படிக்கை செய்த ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அடிச்சுவட்டை பின்பற்றும்போது, தங்களுடைய வாழ்க்கையில் பிதாவாகிய தேவனின் மேலோங்கிய செயல்பாடுகளை அறிந்து, அவருடைய அன்பையும் கருணையையும் உணர்ந்து கொள்ளலாம்.

இராஜ்யத்தில் புது உடன்படிக்கையின் கீழ், இந்த பிரமாணங்கள் முழு மனுகுலத்திற்கும் கொடுக்கப்படும். ஜீவனைப் பெறக்கூடிய ஒவ்வொருவரும் பிதாவாகிய யேகோவா தேவன் மேல் ஆழமான பக்தி வைராக்கியம் கொண்டிருப்பார்கள்.

தேவனின் எல்லையற்ற வல்லமை - சங்கீதம் 103:19-22

*கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது. கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல கிரியைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்; என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி.*

இறுதியில், பிதாவாகிய தேவனே இராஜாவாகவும், சங்கீதம் 2-ம் அதிகாரத்தில் முன்னறிவிக்கப்பட்டபடி அவருடைய சிருஷ்டிகளுக்கு இயேசு தேவனால் நியமிக்கப்பட்ட இராஜாவாகவும் இருப்பார். ஆனால் அவருடைய இரக்கம் நித்தியத்திற்கும் தொடரும் என்று 103-ம் சங்கீதம் உறுதியளிக்கிறது.

அவருடன் நெருக்கமாக இருக்கும் வல்லமையான தூதர்களால், அவர் போற்றப்படுவார் என்றும், அவர்கள் அவருக்கு கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைகளை நிறைவேற்றுவார் என்றும் ஒரு கூட்டிசையோடு இந்த சங்கீதம் முடிவடைகிறது.

சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களாகிய தேவனுடைய பிரதிநிதிகளால் அவர் ஸ்தோத்திரிக்கப்படவேண்டும். தேவனுடைய மகிழ்ச்சிக்கான காரியம் ஒரு அற்புதமான கோட்பாடாகும். இங்கு வேதத்தின் மிகச் சிறப்பான ஒரு வாக்குத்தத்தை நாம் காணலாம் -

"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32) மகிமை அடைந்த பரிசுத்தவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் இயேசுவோடு, அவருடைய அதிகாரத்தைப் பெற்று, இந்த உலக மனுக்குலத்தை ஆசீர்வதிப்பார்கள். தேவனுடைய இந்த முழுமையான ஏற்பாட்டின் நிமித்தம் அவருடைய இரக்கம் பிரதிபலிக்கப்படுவதினால் தேவனுக்கு ஏறெடுக்கப்படும் ஸ்தோத்திரங்கள் பல மடங்காய் அதிகரிக்கும் !

இறுதியாக, தேவனுடைய கிரியைகளின் மகிமையை, அமைதியான முறையில் வெளிப்படுத்தும்படி அவரை ஸ்தோத்திரித்து இந்த கூட்டிசை முடிவடைகிறது.

இந்த சங்கீதம் துவங்கப்பட்டது போல முடிவடைகிறது -

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி."

**....நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்." - யாக்கோபு** 2:13

நீதியான நியாயத்தீர்ப்புக்கு முன்பாக அன்பும், இரக்கமும் வெற்றிகரமாக மேன்மை பாராட்டுவது எப்படி? "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்." (ரோமர் 3:24-26) என்ற தெய்வீக இரக்கத்தினால் நமக்கு உறுதியளிக்கப்பட்ட நீதிமானின் நிலைமையின் நிமித்தமே நீதிக்கு முன் இரக்கம் மேன்மை பாராட்ட முடியும் என்று அப்போஸ்தலன் பதிலளிக்கிறார்.

மேலும், அன்பும், இரக்கமும் நீதியை தோற்கடித்து, வெற்றிகரமாக மேற்கொண்டது என்று பொருள் அல்ல, மாறாக, நீதியை சரியான முறையில் திருப்திபடுத்தியபின், அன்பும் இரக்கமும் மேன்மை பாராட்டுகிறது. மனுஷ ஜீவனுக்கு பதிலாக மனுஷ ஜீவன் கொடுக்கப்பட்டு, சரிநிகர் சமமான விலையைக் கொடுத்து நீதியை நிறைவேற்றின பின் (திருப்தி) அன்பும், இரக்கமும் மேன்மைபாராட்டியது. மனுஷனாகிய ஆதாமுக்கும் அவரால் சாபத்தையும், மரணத்தையும் பெற்ற அனைவருக்கும் பதிலாக, மனுஷனாகிய இயேசு கிறிஸ்து கொடுக்கப்பட்டார். இந்த நோக்கு நிலையில் மட்டுமே அன்பும் இரக்கமும் தெய்வீக நீதியின்மேலும் அதன் நியாயத்தீர்ப்பின் மேலும் மேன்மை பாராட்ட முடியும். மேலும் இப்படிப்பட்ட செயலில் மட்டுமே தேவனுடைய தெய்வீக நீதியும் சமமாக களிகூற முடியும். - Reprints, p. 2328

**எனக்கு கற்பித்தருளும்**

மற்றவர்களின் துக்கத்தை உணர்ந்து கொள்ளவும்,
காணக்கூடிய குற்றங்களை மறைக்கவும்,
எனக்கு காட்டப்படும் இரக்கத்தை நான்
மற்றவர்களிடம் காட்டவும் எனக்கு கற்பித்தருளும்.
நான் சரியாக இருந்தால் நான் அதில் நிலைத்து
நிற்க கிருபை அருளும்,
ஒருவேளை நான் தவறுசெய்தால், சரியான வழியில் செல்ல என் இருதயத்திற்கு போதியும்.

**இரக்கமும், சத்தியமும்**

சத்தியம், தூய்மை, பரிசுத்தம் மற்றும் சகல நன்மைகளையும் பெற்று, முற்றும் நேர்மையாக இருக்கக்கூடிய ஒருவரால் மட்டுமே சத்தியம் மற்றும் நீதியின் கோட்பாடுகளை மனதில் நித்தியமாக வைக்கமுடியும். ஆனால் இந்த குணங்களை மட்டுமே கொண்டிருப்பவர்கள் இரக்கத்தையும் அதிகமதிகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். இவைகளை நம்முடைய கழுத்தைச் சுற்றி அணியவேண்டும் அல்லது கட்டிக்கொள்ள வேண்டும். கழுத்தில் அணிய வேண்டிய நகைகளைப்போல, இந்த குணங்களை நாம் அணிந்தால் மட்டுமே, நாம் பரிசுத்த அலங்காரத்துடன் காணப்படுவோம். இந்த குணங்கள் விலை உயர்ந்த பொக்கிஷம் அல்லது ஆபரணங்களுக்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. இந்த ஆபரணங்களாகிய குணங்கள் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இந்த ஆபரணங்ளை (குணங்களை) நாம் அணிந்துக்கொண்டால், தேவனுடைய பார்வையில் நாம், அவருடைய அங்கீகாரத்தைப் பெறுவோம். பொதுவாக கழுத்தில் அணியும் ஆபரணங்கள் பளிச்சென்று பார்வைக்கு தென்படும். இந்த விலையேறப்பெற்ற குணங்கள், மிக நேர்த்தியானதும், எடுப்பான ஒரு அட்டிகையாக இருக்கிறது. நாம் எதை செய்தாலும் விலையுயர்ந்த அட்டிகையை அணிந்து கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையின் சகல காரியங்களும் இந்த குணங்களின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். நாம் எதையாவது விற்றாலும், வாங்கினாலும், எதைச் செய்தாலும், இந்த அட்டிகையை நாம் அணிந்திருக்க வேண்டும். ஒருவர் நம்மை சந்திக்கும்போதும் நாம் அணிந்திருக்கும் அட்டிகை அவர்களுக்கு முதலில் காணப்படவேண்டும். அதாவது அவர்களிடம் இந்த மேன்மையான குணங்களை முதலில் வெளிப்படுத்தவேண்டும்.

இதற்கும் மேலாக, நாம் கழுத்தில் மட்டுமே அணிந்திருந்திருக்கும் சத்தியத்தையும் இரக்கத்தையும், நம்முடைய இருதயத்தில் எழுத வேண்டும்.தொடர்ந்து இந்த அட்டிகையை அணிந்தால் நிச்சயமாக அது நம்முடைய இருதயத்திலும் எழுதப்படும். தேவன் அவருடைய தெய்வீக பிரமாணத்தை முதல் முதலில் ஆதாமின் இருதயத்தில் எழுதினார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். சத்தியமும், இரக்கமும் அந்த பூரணமான இருதயத்தில் வைக்கப்பட்ட தெய்வீகமான குணங்களாம். தேவன் இரக்கமும், மன உருக்கமும், அன்புள்ளவராகவும் இருக்கிறார். தேவன் இந்த குணங்களை முழுமையாக கொண்டிருப்பதைப் போல மனுஷனும் பெற்றிருந்தார். மனுஷன் அநீதியிலும், அசத்தியத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவில்லை, தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். ஆனால் பூரணமான நிலையிலிருந்து அவர் விழுந்தார். பல நூற்றாண்டுகளாக மனுஷனுடைய சரீரமும் , சிந்தையும் விழுந்து கொண்டிருக்கிறது. ஆகையால் மற்றவர்களின் உழைப்பால் சுயத்தை திருப்தியாக்கும் முயற்சியில், இரக்கம் மற்றும் சத்தியத்தின் கோட்பாடுகள் நம்முடைய இருதயத்தில் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டது. தண்ணீர் சொட்டு, தொடர்ந்து சொட்டி, கல்லும் உருக்குலைவது போல, மனுஷனுக்குள் இருந்த தேவ சாயல் உருக்குலைந்தது. ஆகவே மனுஷனுக்குள் நீதியின் உணர்வு, பொறுமை, சாந்தம், கனிவு, சகோதர பாசம், அன்பு போன்ற குணங்களைக் காண்பது அரிதானது. ஆனால் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டபோது இந்த குணங்களை தாராளமாக அவருக்கு தேவன் வைத்தார்.

சுயநலம் நிறைந்திருக்கும் மனுஷ இருதயத்தில் மீண்டுமாக அவருடைய பிரமாணங்களை எழுதும் நோக்கத்துடன், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் புது உடன்படிக்கையின் கீழ் நிர்வகிக்கப்படும். " இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல;

ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 31:31-33) "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." ( எசேக்கியேல் 36:26) தேவனுடைய பிரமாணம் - இரக்கமும், சத்தியமும் உள்ள பிரமாணங்களாக இருக்கிறது. தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் சகலமும் நீதியாக நடப்பிப்பதே சத்தியம். சகல ஆவியின் கனிகளும் இரக்கத்திற்குள் அடங்கும். ஆயிர வருட ஆட்சியில் இந்த குணங்கள் அனைத்தும் எல்லாருடைய இருதயங்களில் மீண்டும் எழுதப்படும். மீண்டுமாக எழுதப்படக்கூடிய இந்த காரியம் இப்போதே சபையில் துவங்கிவிட்டது. இதை தொடர்ந்து ஆயிர வருடத்திற்குள் இந்த உலக மனுக்குலத்தின் இருதயங்களில் எழுதி முடிக்கப்படும். நாம் இன்று இந்த குணங்களை நம்முடைய இருதயத்தில் எழுதிகொண்டிருக்கிறோம். இவைகளை நாம் முழுமையாக எழுதிகொள்ள மிகவும் வாஞ்சிக்கிறோம். எழுதப்பட்டபின் நம்முடைய தலைமை போதகரிடம் நம்மை நாம் ஒப்புகொடுக்கலாம். இதற்கு இடையில், நம்முடைய வாழ்க்கை சந்திக்கும் அனுபவங்களின் வழியாக நமக்குள் இன்னும் எழுதப்படாத குணங்களை, தேவன் நமக்கு சுட்டிக்காட்டுகிறார். நாம் பொறுமைக்காக ஜெபிக்கையில், அதற்குரிய சூழ்நிலைகளை தேவன் நமக்கு ஏற்படுத்தி, பொறுமை நம்மிடம் வளர்ச்சி அடைவதற்கு வழிவகுப்பார். நாம் அன்பிற்காக ஜெபிக்கையில், அதற்கான சோதனைகள் அனுமதிக்கப்படும். அதேபோல இரக்கத்திற்காக ஜெபிக்கும்போது நாம் இரக்கம் காட்ட முடியாத அளவுக்கு எதிர்ப்புகள் ஏற்படலாம். ஆனாலும் அதற்கு மத்தியில் நாம் இரக்கம் பாராட்டும்போது நிச்சயமாக நமக்கும் இரக்கம் வளர்ச்சி அடையும். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் இரக்கம் பாராட்ட கற்றுக்கொள்ளலாம். இப்படியாக, நம்முடைய இருதயங்களில் சத்தியத்தையும், இரக்கத்தையும் எழுதுவதற்கு தேவன் நமக்கு அநேக வாய்ப்புகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

- Reprints, p.5309

## யோசேப்பின் பழிவாங்குதல்

எவ்வளவு நேர்த்தியான பழிவாங்குதல்! பெற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மன்னிப்பையும், அனுதாப உணர்வுகளையும் யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் மேல் குவித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எத்தனை கிறிஸ்தவர்கள் யோசேப்பை போல் செயல்படமுடியும் ? இன்றைய கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, வசனங்களின் நெறிமுறைகளை அறிந்து, யோசேப்பைக் காட்டிலும் பல வழிகளில் மேலானவர்களாக இருக்கிறார்களே. கிறிஸ்துவையும் அவருடைய ஆவியையும், எவ்வளவு ஆழமாக யோசேப்பு அடையாளப்படுத்துகிறார்! இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாமல் சிலுவையில் அறைந்ததினால், கிறிஸ்துவின் சகோதரர்களான சகல யூதர்களும் நித்தியமாக உபத்திரவப்படுவார்கள் என்று இருண்ட காலங்களின் விசுவாச அறிக்கைகள் காலபோக்கில் நம்மை தவறாக வழிநடத்தியது !

இப்பொழுது அதிகமான வெளிச்சத்தில் வேதாகமத்தை ஒவ்வொரு பக்கமாக புரட்டிப் பார்க்கையில், யூதர்களுக்கு நித்திய ஆக்கினைக்கு பதில், தெய்வீக இரக்கமும் மன்னிப்பும் கிடைக்கும் என்பதை அறிந்துகொள்கிறோம். மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டபின், ரோ 11:25-33 -"பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள். " என்று பவுல் குறிப்பிடுவதுபோல வெகு சீக்கிரத்தில் இந்த கிருபை அவர்களுக்கு கையளிக்கப்படும். இதே காரியத்தை இஸ்ரயேலின் மற்றொரு தீர்க்கத்தரிசியும் குறிப்பிடுகிறார் - "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி," (சகரி 12:10). உண்மையான வேதனையோடு துக்கித்து, பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் நடப்பித்த மிக பெரிய குற்றத்தை உணருவார்கள். ஆகையால், அவர்கள் நித்தியமாக தண்டிக்கப்படுவதற்கு பதிலாக, தேவன் அவர்களுக்கு கிருபை அளிப்பார். "எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்" என்று கர்த்தர் அறிவிக்கிறார்.

- Reprints, p. 5234

# சீலிய நாட்டின் சுரங்கத் தொழிலாளர்கள் மீட்பு

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். - யோவான் 11:25, 26

2010, ஆகஸ்ட் மாதம் 5ம் தேதி, அட்டாகாமா வனாந்தரத்தின் வடக்கில் சீலி என்ற இடத்தில் முப்பத்தி மூன்று சுரங்கத்தொழிலாளிகள் தங்களுடைய வேலையை துவங்க ஒரு சிறிய பொன் மற்றும் செம்பு சுரங்கத்திற்குள் நுழைந்தார்கள். அதை தொடர்ந்து 69 நாட்கள் தரை மட்டத்திலிருந்து சுமார் அரை மைல் ஆழத்தில் இவர்கள் சிறைப்படப்போகிறார்கள் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். அந்த நாட்கள் முடிந்தபின் அந்த சுரங்கத்திலிருந்து இருபத்தி எட்டு அங்குல துவாரத்திலிருந்து ஒவ்வொருவராக எழும்பி வருவதை இந்த முழு உலகமும் ஆச்சரியத்தோடு கவனித்தார்கள். கற்பனை செய்து பார்க்கமுடியாத அளவுக்கு இது ஒரு அற்புதமான மீட்பு என்று பார்வையாளர்கள் அறிக்கையிட்டார்கள். கடைசி தொழிலாளி வெளிவந்தபின் - "நாங்கள் அற்புதமான ஒரு இரவில் வாழ்ந்தோம், ஜீவன் மரணத்தை மேற்கொண்ட அந்த இரவை எங்கள் வாழ்க்கை முழுவதும் நினைவில் கொள்ளுவோம் என்று சீலியின் ஜனாதிபி செபாஸ்டீன் பின்னீரா கூறினார். "டானியேல் உண்மையில் மறுபடியும் பிறப்பான். ஆனால் நான் அவனை கட்டி அணைப்பதற்குமுன், நான் அவனை எவ்வளவு நேசித்தேன் என்று சொல்லுவேன், இந்த சம்பவத்தை அனுமதித்த தேவனுக்கு நன்றி சொல்லுவேன்" என்று அலிக்கா காம்போஸ் மீட்கப்பட்ட தன்னுடைய மகனைக் குறித்து கூறினார்.

**மரணமும், பேரழிவும்**

சுரங்கத்தில் ஏற்படும் எல்லா விபத்துக்களும் இவ்வளவு மகிழ்ச்சியோடு முடிவடைவதில்லை. ஆதி காலத்தில் பூமிக்குள் இருக்கும் சுரங்கபாதைகள், இருட்டும், அழுக்கும், அபாயகரமாகவும் இருந்தது. பொதுவாக நூறடிகளுக்கு மேல் நிலக்கரியை வெட்டி எடுக்கும் சுரங்க தொழிலாளிகள் அடிக்கடி காயப்பட்டு, மரிப்பது வழக்கமாக இருந்தது. அப்பொழுது பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகக் குறைவாக இருந்தது. காயப்பட்டு, மரிக்கும் ஆட்களுக்கு பதிலாக ஐரோப்பாவிலிருந்து அகதிகள், அமெரிக்காவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டது. அவர்கள் தோண்டும் அளவுக்கு தகுந்தபடி கூலி கொடுக்கப்பட்டது. ஆகவே, அவர்கள் தங்களுடைய பாதுகாப்பை குறித்து கவலைப் படாமல் வேகமாக வேலை செய்தார்கள்.

1891ம் வருடத்தில் சுரங்க வேலைக்காரர்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கான சட்டங்கள் ஏற்றப்பட்டது. சுரங்க தொழில் மேலும் பாதுகாப்போடு செயல்படவும், அதற்கேற்ற காரியங்களுக்கு அரசாங்கம் கவனம் செலுத்தியது இதுவே முதல் முறையாகும். மற்ற சட்டங்களுக்கு மத்தியில் இந்த சட்டங்கள் குறைந்த அளவில் ஸ்தாபிக்கப்பட்டது. பன்னிரெண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வேலை செய்வதற்கு தடைவிதித்தார்கள். 1973ம் வருடம் Mining Enforcement and Safety Administration - MESA வின் செயலாளர் தனித்து செயல்படத்துவங்கியது. இந்த அமைப்பானது, பாதுகாப்பையும், உடல் நலத்தையும், மற்ற பொறுப்புகளையும் வளர்க்கத் துவங்கியது.

சுரங்கப் பாதையில் நடந்த எத்தனையோ விபத்துகளில், 1942ம் வருடம், ஏப்ரல் மாதம் 26-ம் தேதி ஜப்பானியர்கள் கைப்பற்றிய மன்ஜூரியாவில் நடந்த விபத்தே மிக மோசமானது என்று யூகிக்கப்படுகிறது. இதில் 1,549 சீன தொழிலாளர்கள் மரித்தார்கள். இந்த தொழிலை பொருத்தவரையில், இந்நாளிலும் சீனாவில் குறைந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்படுகிறது. 2007-2009 வருடங்களுக்குள், முப்பத்து மூன்று தனிப்பட்ட சுரங்க விபத்துகளில் 1,600பேர் மரித்தும் காணாமலும் போனார்கள்.

திடீர் என்று வரக்கூடிய புயல், வெள்ளத்திலிருந்து ஜனங்களை மீட்க முடியாமல் போனாலும், சீலி சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்களைக் காப்பாற்ற இந்த உலகம் அதிகமாக முயற்சித்தது. 2009ல் மட்டும் 10,655 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும் 119 மில்லியன் பேர் பரிதாபமாக உயிரிழந்தார்கள் என்றும் Epidermiology of Disasters என்ற ஆய்வு மையம் கூறுகிறது.

**உயிர்த்தெழுதல்**

மரணத்தைத் தடுப்பதற்கு அநேக முயற்சிகள் எடுப்பதற்கு வாய்ப்புகள் இருந்தபோதிலும், மரணம் ஒரு தவிர்க்க முடியாத துக்ககரமான நிகழ்ச்சியாக இருக்கிறது. துரதிஷ்டம் நேரிடும்போது, நன்மையான காரியங்கள் நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும். ஒருவர் கடுமையாக உழைத்து, நல்ல காலங்களை எதிர்ப்பார்க்கிறார். வியாதி வரும்போது, சீக்கிரத்தில் சுகம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மரணம் எல்லாவற்றிற்கும் மேலே உயர்ந்த அதிகாரம் கொண்ட நம்பிக்கையற்ற கடைசி முடிவாக இருக்கிறது. நேசிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற இயலாத நிலை, உதவுவதற்கு அப்பார்ப்பட்ட நிலை, எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு நழுவிப்போகும் சூழ்நிலை, வாழ்க்கையில் மெல்லியதாகக் கட்டப்பட்ட பந்தங்களின் முறிவு, இதுபோன்ற காரியங்கள் அநேகம்.

ஆனால் பிதாவாகிய தேவன் மரணத்திலிருந்து கிருபையாக தப்பிக்க வழி செய்திருக்கிறார். மரித்தோர் மீண்டும் ஜீவனைப் பெற ஒரு ஈட்டு கிரயத்தைக் கொடுத்திருக்கிறார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3 :16) "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." (ஓசியா 13:14) இயேசு கிறிஸ்து ஒரு பூரண மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னிருந்த பூரண மனித நிலையில் இயேசு இருந்தார். ஆதாமை போலிராமல், இயேசு தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய பரிபூரணமான மாம்ச ஜீவனை ஆதாமுக்கு பதிலாக தியாக பலியாக ஒப்புக்கொடுத்தார். இலவசமான இந்த பரிசு - ஆதாமின் மேலிருந்த மரண தீர்ப்பை மட்டும் அல்ல, அவரின் கீழ்படியாமையினாலே மரண தீர்ப்பை பெற்ற முழு மனுக்குலத்திற்கும் இந்த மரணம் இரத்து செய்யப்பட்டது.

(ரோமர் 5 :18,19) போதிக்கப்படும் வேதாகமப் போதனையில் - ஈடுபலியின் சத்தியமே மிக முக்கியமானதும் அர்த்தமுள்ளதுமாக இருக்கிறது. மரித்தோர் ஜீவனுக்குத் திரும்புதல், மரணத்தினால் பிரிந்த குடும்பங்களை மகிழ்ச்சியோடு ஒன்று சேருதல் மற்றும் இந்த பூமியின் மேல், முடிவில்லாததும், சந்தோஷமான சுகமுள்ள வாழ்க்கையைப் பற்றி இந்த சத்தியம் போதிக்கிறது.

இப்படிப்பட்ட உயிர்த்தெழுதலின் ஒரு முன்னோட்டத்தை இயேசு தம்முடைய வார்த்தைகளில் அறிவித்தார். (யோவான் 11:25,26) தன்னுடைய நெருங்கிய நண்பர் லாசரு எதிர்பாராமல் மரித்துவிட்டார் என்று கேள்விப்பட்ட இயேசு கல்லறைக்குச் சென்று கல்லை புரட்டச் சொன்னார். "..... லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்." (யோவான் 11:43,44) லாசரு கல்லறையிலிருந்து வெளியே வந்தார், அவர் உயிருடன் திரும்ப வந்ததினால், அவரின் குடும்பத்தாரும், நண்பர்களும் அடைந்த சந்தோஷத்தை சற்று கற்பனை செய்து பாருங்கள். அவர்களின் துக்கமான கண்ணீர் ஆனந்த கண்ணீராக மாறியது.

வெகு சீக்கரத்தில் இந்த உலகத்தில் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இதே காரியங்கள் நடைபெறும். "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோவான் 5:25) சீலியின் சுரங்க தொழிலாளிகளின் மீட்பை இந்த முழு உலகமும் கண்காணித்தக் காரியத்தை இந்த வசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.சீலியில் நடந்ததுபோல, மரித்த ஒவ்வொருவரும் ஆரவாரமான கொண்டாட்டத்துடன் எழுந்து வருவார்கள். "யோசனைக்கு அப்பாற்பட்ட அற்புதமான" உண்மை. நேசிக்கப்பட்ட ஒவ்வொருவரும் மீண்டும் தேவனுடைய இராஜ்யத்தில் ஒன்று சேருவார்கள். அங்கு யாரும் அழிக்கப்டுவதுமில்லை, துன்புருத்தப்படுவதுமில்லை, நீடித்தநாட்களாக அனைவரும் ஜீவிப்பார்கள். மரணத்தின் குழியிலிருந்து மீட்கப்பட்ட அனைவரின் நன்றிகளும், பூமி முழுவதும் எதிரொலிக்கும். எவ்வளவு மகிழ்ச்சியான காலமாக இருக்கும்!